Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத் திகதி : 15.11.2002
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 6 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 16 (23.10.2002) புதன்கிழமை இதழ் : 23

## அரசு - புலிகள் செயலணிக் குழு குறித்து தலைவர் பிரபாவுடன் இன்று பேசுவோம்!

### யாழ்.செய்தியாளர் மாநாட்டில் விதார் ஹெல்கிசன்

(நமது நிருபர்)

இந்த அழகிய யாழ்ப்பாணக் குடாநாடு பயங்கரமான போரின் பிடிக்குள் சிக்குண்டு கிடந்த காலத்தில் ஊடகங்கள் வாயிலாக அவ் விடயங்களை அறிந்து மிகவும் மனம் நெகிழ்ந்திருக்கிறேன் என்று கூறியவண்ணம் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்



ஹெல்கிசன் யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டை ஆரம்பித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் 'நமது ஈழநாடு' செய்தியாளர் எழுப்பிய கேள்விகளையும் அவற்றுக்கு ஹெல்கிசன் அளித்திருந்த பதில் களையும் இங்கே தருகின்றோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. என்றால் என்ன? நோர்வே அமைச்சர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரிடம், ரொய்ட்டர் செய்தியாளர் "ஜே.வி.பியின் செயற்பாடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டார்.

அக்கேள்விக்குப் பதிலளிக்காமல் - மீண்டும் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட செய்தியாளர்களிடம் "ஜே.வி.பி என்றால் என்ன?" என்று கேட்டார் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர். உடனே செய்தியாளர்கள் மத்தியில் பலத்த சிரிப்பொலி ஏற்பட்டது.

நிலைமையைச் சுதாகரித்துக் கொண்ட ஹெல்கிசனுக்கு , நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் ஜே.வி.பி என்றால் என்ன என்று விளக்கினார்.

அதன் பின்னர் ரொய்ட்டர் செய்தியாளரின் கேள்விக்கு பதில் கூற முயற்சித்தார் ஹெல்கிசன்.

# பிரபா - புறூவ் ஹொவ்டே கிளிநொச்சியில் சந்திப்பு!

### நோர்வே பொலிஸ் குழு பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலிருந்து, நோர்வே உயர்மட்டத் தூதுக்குழுவினருடன் வருகை தந்திருந்த நோர்வே விசேட பொலிஸ பிரிவைச் சேர்ந்த மூன்று பொலிஸாரும், ஸ்ரீலங்கா பொலிஸாரும் இணைந்து, நோர்வே உயர்மட்டத் தூதுக்குழுவினரின் யாழ்.விஜயத்துக்கான பாதுகாப்பு ஒழுங்குகளைக் கவனித்தனர்.

நோர்வே பொலிஸார் சிவில் உடையில் அதிநவீன பாதுகாப்புக் கருவிகளுடன் காணப்பட்டனர்.

## பாலா, தமிழ்ச்செல்வன் உடனிருந்தனர்

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை - இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்றுச் சந்தித்துப் பேசினார்.**

நேற்றைய சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் தலைவர் பிரபாகரனுடன் - அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி. அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பேச்சுக்களில் பங்குபற்றினர்.

முன்னதாக கொழும்பிலிருந்து நேற்றுக்காலை விசேட ஹெலிகொப்டர் ஒன்றில் கிளிநொச்சி வந்தடைந்த புறூவ் ஹொவ்டேயுடன் அவரது துணைவியார், கண்காணிப்புக் குழுவின் துணைத் தலைவர் ஹொக்லண்ட், தலைமை அதிகாரி பீற்றர் நெய்லன் ஆகியோர் வந்திருந்தனர்.

வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள தற்போதைய நிலவரம் தொடர்பாக நேற்றைய பேச்சுகளில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



### முதற்கட்டப் பேச்சு நேற்றிரவு நடந்தது!

(கிளிநொச்சி நிருபர்)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் நேற்றிரவு கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்தனர்.

நேற்றிரவு ஏழு மணிக்கு கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் ஆரம்பமான இச்சந்திப்பு எட்டு மணிவரை தொடர்ந்தது. நோர்வே தரப்பில் பிரதி அமைச்சர் ஹெல்

(10ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் நோர்வே குழு





## உலகத் தமிழர்களுக்கு தலைமை தாங்கும் வலிமையும் தகுதியும் புலிகளுக்கே உண்டு!

### திருமாவளவன் சிறப்புரை

(நமது நிருபர்)

உலகத் தமிழருக்குத் தலைமை




தாங்குகின்ற வலிமையும் தகுதியும் விடுதலைப் புலிகளுக்கே உண்டு என தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா. திருமாவளவன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற தமிழ்க் கூடல் இறுதி நிகழ்வில் சிறப்புரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது:-

நீங்கள் செய்திருக்கின்ற தியாகத்தை பார்க்கின்றபோது, உங்களுடைய வரலாற்றைப் பார்க்கின்றபோது நாங்கள் மிகவும் பெருமைப் படுகின்றோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சமாதானம் வந்தும் விழுகிறது நிக்கேல்ல..

### கிபிர் விமானம் வீழ்ந்து நொருங்கியது!

(கொழும்பு)

விமானப்படையின் கிபிர் ஜெட் போர் விமானமொன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகி குளியாப்பிட்டியப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது.

கட்டுநாயக்கா விமானத்தளத்தில் இருந்து நேற்றுக்காலை 8.55 மணிக்குப் புறப்பட்ட கிபிர் சி-2ரக ஜெட் விமானமே விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது. விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய சற்று நேரத்தில் அதில் கோளாறு ஏற்பட்டிருந்ததாக விமானி கட்டுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் மாணவர் மலர், குறைதீர் மன்றம்

# நோர்வே தூதுக்குழுவின் யாழ். விஜயம்



நோர்வே தூதுக்குழுவினர் யாழ்.செயலகத்தில் நடத்திய மாநாட்டில் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் அமர்ந்திருப்பதை முதலாவது பட்த்திலும், செயலக மாநாட்டு மண்டபத்தில் நோர்வே குழுவினருடன் அதிகாரிகள் உரையாடுவதை இரண்டாவது படத்திலும், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்



யாழ்.செயலக மாநாட்டில் மேலதிக அரச அதிபருடன் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் உரையாடுவதை முதலாவது படத்திலும், நோர்வேக் குழுவின் ஏனைய அதிகாரிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.




யாழ்.நூல் நிலையத்தில் இடம் பெற்ற சந்திப்பில் நோர்வே தூதரக அதிகாரி, எரிக்சொல்ஹெய்ம், வெஸ்ட்பேர்க்.



நூல் நிலையத்தில் மாநகர முதல்வருடனான சந்திப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் பேசுகின்றார். உரையை மாநகர சபை அதிகாரி மொழி பெயர்க்கின்றார்.



யாழ்.நூல் நிலைய வாசலில் நோர்வே குழுவினரை வழியனுப்புகின்றார் மாநகர முதல்வர்.



யாழ்.பொதுநூலகத்தில் மாநகர சபை அதிகாரிகளுடன் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம்

## இன்றைய நாள் இனிய நாள்

**23.10.2002 - புதன்கிழமை**

**மேடம்:-** தேக சுகக்குறைவு, பணவரவு குறைவு, சமய அறிஞர் தரிசனம், நண்பர்கள் உறவு, கல்வியில் ஊக்கம் தேவை, தொழில் முன்னேற்றம், வியாபாரம் மத்திமநிலை.

**இடபம்:-** தேகசுகக் குறைவு, பணவரவு நன்று, அயலவர்களிடம் உறவுபேண வேண்டும், மனச்சஞ் சலம், கல்வி முன்னேற்றம்,தொழில் முன்னேற்றம், வியாபாரம் மத்திமநிலை.

**மிதுனம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, உறவினர் வருகை, அறுசுவையுண்டி, கலை நிகழ்ச்சியில் ரசனை, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, கௌரவம், மதிப்பு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், தொழில் மத்திம நிலை, வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்:-** தேகசுகக் குறைவு, பணவரவு நன்று, தேவையற்ற செலவு, பிதா சுகயீனம், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபாரம் மந்தநிலை.

**கன்னி:-** தேகசுகக்குறைவு, பணவரவு நன்று, தேவையற்ற பயம், எடுத்த காரியம் தாமதமடையும், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**துலாம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, வாகன வசதி, கௌரவம், ஆடையாபரண பலன்,அறுசுவை யுண்டி, கல்வி மத்திமநிலை, தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, எதிரி தலை குனிவு, செய்தொழிலில் மேன்மையடைதல், தெய்வதரிசன பலன், கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**தனு:-** தேகசுகக் குறைவு, பணவரவு நன்று,புத்திரரால் செலவு,கல்வி முன்னேற்றம், பிரயாணத் தடை, தொழில் முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம்.

**மகரம்:-** தேகசுகம் சமநிலை, பணவரவுக்குறைவு, மாதாவினால் வைத்தியச் செலவு, யாரையும் நம்பாத தன்மை, கல்வி முன்னேற்றம், தொழில் மந்தநிலை, வியாபார முன்னேற்றம்.

**கும்பம்:-** தேகசுகம் நன்று,பணவரவு நன்று, மனோதிடம், செய்தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற றம், தொழில் மத்திமநிலை, வியாபார முன்னேற்றம்.

**மீனம்:-** தேகசுகம் நன்று, பணவரவு குறைவு, தேவையற்ற செலவு, பொது சேவையில் கௌரவக் குறைவு, எடுத்த காரியம் தடை, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியா பாரமுன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

**நுண்கலைமாணி(இசை/ நடனம்/ பண்ணிசை/ நாட்டாரிசை/ சித்திரமும் வடிவமைப்பும்)**
**கற்கைநெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி- 2003 / 2004**

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியுடையவர்களிடமிருந்து 18.11.2002ம் திகதி வரை விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**கற்கை நெறிக்காலம்-** நான்கு வருடங்கள்

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**1. நுண்கலைமாணி -இசை (கர்நாடக சங்கீதம்)**
2002 ஆம் ஆண்டு ஏப்ரல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்த னைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள் ளதோடு, சித்தி பெற்ற பாடங்களில் சங்கீதத்தையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**2. நுண்கலைமாணி- நடனம்**
2002 ஆம் ஆண்டு ஏப்ரல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைக ளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் பரதநாட்டியத்தையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**3. நுண்கலைமாணி -பண்ணிசை/ நாட்டாரிசை**
2002 ஆம் ஆண்டு ஏப்ரல் க.பொ.தஉயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைக ளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களுள் சங்கீதம் ஒன்றாகவும் அத்துடன் தமிழ்/ இந்துநாகரிகம்/ இந்து சமயம்/ வரலாறு ஆகியவற்றில் ஏதாவதொன்றில் சிறப்புச் சித்தி (B) பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடை யோராவர்.

**முக்கிய குறிப்பு**
மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்குரிய அனுமதிக்கான விண்ணப் பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**4. நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்**
2002 ஆம் ஆண்டு ஏப்ரல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைக ளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத்தகுதி பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.
மேற்குறித்த கற்கைநெறிக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத்(Aptitude Test) தோற்றுதல் வேண்டும். முதல் நிலையில் தெரிவு செய்யப் பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு**
**1.** அனைத்து கற்கைநெறிகளுக்குரிய விண்ணப்பதாரிகளும் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தினதும் 'Z' Score பத்தி ரத்தினதும், பொதுச் சாதாரண வினாத்தாளின் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பத்திரத்தினதும் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைக்க வேண்டும்.

**2.** விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்துக்குரிய கற்கைநெறிகளுக்கு முன்னுரிமையின்படி விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

**3.** மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத் தப்படாத, மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாத விண் ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை யாழ். பல கலைக் கழக சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ ரூபா 150 செலுத் திய பற்றுச் சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.


**4.** தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 150 ஐ செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட, சுயவிலாசம் இடப்பட்ட 23x10 செ.மீ. அளவுள்ள கடித உறையை "கொழும்பு ஸ்ரோர்ஸ்/ அலுவலகம், சென்ரல் றோட், கொழும்பு 12, தொலைபேசி இலக்கம்-01-435620" எனும் முகவரிக்கு அல்லது "உதவிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்" அல்லது "உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா" என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**5.** விண்ணப்பங்கள் 23x10 செ.மீ அளவு கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் "நுண்கலைமாணி (இசை/ நடனம்/ பண்ணிசை/ நாட்டாரிசை/ சித்திரமும் வடிவமைப்பும்) கற்கைநெறிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:**
**உதவிப்பதிவாளர்/ கலைப்பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/ 077)

**பதிவாளர்.**



# முக்கிய அமைச்சர்களின் குறைகள் பற்றி அதிருப்தி எம்.பிக்கள் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பிலிருந்து அருள்)

ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டுள்ள கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தவுள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது அமைச்சர்களாக உள்ள ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரத்ன, எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்ட பல அமைச்சர்களின் செயற்பாடுகளில் இக்குழு அதிருப்தி கொண்டுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்தில் உள்ள இந்த அமைச்சர்கள் சமாதானத்துக்கான எந்தப் பங்களிப்பையும் செய்யவில்லை என்றும் கேள்விப்பத்திர நடைமுறைகள், கொள்வனவுகள், குத்தகை, பதவி உயர்வுகளில் தலையிடுதல், சட்டவிரோதக் குழுக்களுடன் நேரடித் தொடர்புகள் போன்ற விவகாரங்களில் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகளில் குறிப்பிட்ட சில சிரேஷ்ட அமைச்சர்களுக்கு தொடர்பிருப்பது தொடர்பான ஆவணங்களைத் தாம் வைத்திருப்பதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்வதற்காக 16 பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## சமுர்த்தி சிறுகுழுக்கள் அமைப்பு

மண்கும்பான் பிரதேசத்தில் சமுர்த்தி சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஐந்து பேர் கொண்ட சிறுகுழுக்களாக அமைக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களிடமிருந்து - வாரமொன்றுக்கு 10ரூபா வீதம் அறவிடப்படுகிறது. பின்னர் இந்நிதியானது சமுர்த்தி வங்கியினில் வைப்பிடப்பட்டு குறிப்பிட்ட தொகை சேர்ந்த பின் அவை குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறு கைத்தொழில் மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு வழங்கப்படும். (53)

# தனங்கிளப்பு, மறவன்புலோவில் பயிர் செய்ய அனுமதிக்கப்படாததால் விளைநிலங்கள் பாழ்!

## 4500 ஏக்கர் நெற்காணிகள் தரிசாகின்றன

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் உள்ள தனங்கிளப்பு, மறவன், புலோ ஆகிய பகுதிகளிலுள்ள வயல்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் படையினர் தொடர்ந்தும் அனுமதியளிக்க மறுத்து வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் உள்ள சுமார் 5 ஆயிரம் ஏக்கர் வயல் நிலப பகுதியில்- 4500 ஏக்கர் நிலப்பகுதி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

விவசாய சம்மேளனங்கள், அமைப்புக்களின் கோரிக்கைகளையடுத்து இப்பகுதியில் உள்ள மொத்த வயல்களில் மூன்றில் ஒரு பகுதியில் நெற்பயிர்ச்செய்கைக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ உறுதியளித்திருந்தார்.

எனினும்- 500 ஏக்கர் நிலப்பகுதியில் மட்டுமே விவசாயச் செய்கையில் ஈடுபடப் படையினர் அனுமதியளித்துள்ளனர். தனங்கிளப்பு, மறவன்புலோப் பகுதியில் உள்ள வயல நிலங்களில் பெரும்பாலானவற்றில் விவசாயச் செய்கையில் ஈடுபடவும், மக்கள் மீளக்குடியேறவும் அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் இப்பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியிருக்கின்றனர். (29)

# சுவிஸ் நாட்டில் வரும் 5ஆம் திகதி 'வெல்லும் தமிழ் விழா'

(மானிப்பாய்)

சுவிஸில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஏற்பாட்டில் 'வெல்லும் தமிழ் விழா' நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் துரை.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளில் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் பல்லாண்டு காலமாக அனுபவித்து வரும் துன்ப, துயர இன்னல்களை உலகிற்கு உணர்த்துவதும், ஈழத்தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்காக குரல் கொடுக்க உலகத் தமிழர்களைத் தூண்டுவதும் இந்த விழாவின் பிரதான நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உலகத் தமிழர் கொடியேற்றலைத் தொடர்ந்து உலகத் தமிழர் கீதம் இசைக்கப்படும். இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக தமிழ் மணிப் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் இயல், இசை, நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இலங்கையிலுள்ள இலக்கியவாதிகள், கல்விமான்கள், அறிஞர்கள், நலன்விரும்பிகள் இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை மேற்கொண்டுள்ளது. (100)

# பொ.ஐ.முவுக்கு தாவுவாரென அச்சம்; ரம்புக்வெல அமைச்சராவதன் பின்னணி!

(கொழும்பிலிருந்து அருள்)

கண்டி மாவட்ட எம்.பியான கேலிய ரம்புக்வெல தலைமையிலான 16 ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொ.ஐ. முவிற்கு ஆதரவளிக்கவிருப்பதாகச் செய்திகள வெளியாகியதை அடுத்தே அவருக்கு அமைச்சர் பதவி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

இந்த வாரம் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இவர்களில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கேலிய ரம்புக்வெலவும் அடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் அமைச்சராக நியமிக்கப்படுவதன் பின்னணி குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுவதாவது, கேலிய ரம்புக்வெல 16 பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவளிக்கத் தயாராக இருந்ததாகவும் இதையடுத்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவரை அமைச்சராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# ஷெல் காஸ் விலை 39 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

ஷெல் காஸ் நிறுவனம் சிலிண்டர் ஒன்றின் விலையை 39 ரூபாவால் உயர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது. விலை உயர்வின் பின்னர் சிலிண்டர் ஒன்றின் புதிய விலை 567 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் காஸின் விலை 40 அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாகவும், இதனாலேயே இந்த அதிகரிப்பைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள 'ஷெல் காஸ்' நிறுவனம், 50 ரூபா அதிகரிப்பை செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமையவே 39 ரூபா அதிகரிப்புச் செய்யப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

# வெலிக்கடைச்சிறையில் விசேட மேல் நீதிமன்று; தமிழ்க் கைதிகளின் வழக்குகளைத் துரிதப்படுத்த ஏற்பாடு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விசேட மேல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.


பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 150 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

களுத்துறை, வெலிக்கடை போன்ற சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வழக்கு விசாரணைகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதால், நீண்ட காலம் சந்தேகநபர்களாகச் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையைத் தவிர்க்கவும் துரிதமாக வழக்குகளை விசாரித்து முடிக்கும் நோக்குடனும் வெலிக்கடைச் சிறையில் விசேட மேல் நீதிமன்றம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவுடன் தேசிய அரசு அமைக்க ஜனாதிபதி சந்திரிகா முன்வரவேண்டும்

## பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி



(கொழும்பு)

ஐதேகவுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா முன்வரவேண்டும் என பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி கேட்டுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதே ஒரே தீர்வாகும். எனவே ஐ.தே.கவுடன் இணைந்து ஜனாதிபதி தேசிய அரசாங்கத்தை அமைக்க முன்வரவேண்டும்.

இந்தத் தேசிய அரசாங்கத்தில் ஜனாதிபதி தனக்குப் பிடித்தமானவர்களுக்கு வேண்டுமானால் அமைச்சுப் பதவிகளை வழங்கட்டும். நாடு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. எனவே இதிலிருந்து மீள்வதற்கு வழிவகை காணப்படுவதே இன்றைய அவசிய நிலையாகும் எனத் தெரிவித்த பௌசி- இன்னொரு தேர்தலை எதிர்கொள்ளக்கூடாதென்பதற்காகவே 19ஆவது அரசியல் சீர்திருத்தத்திற்கு ஆதரவளிக்க முன்வந்ததாகவும் தெரிவித்தார்.

அரசியல் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை உடன் தீர்க்காவிட்டால் சமாதான முயற்சிகளும் குழம்பலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# இலங்கையின் அபிவிருத்தி விடயங்களைக் கவனிக்க ஜப்பானிய அரசால் அதிகாரி நியமனம்!

இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த, ஜப்பான் அரசாங்கம் விசேடமாக ஆகாசி என்ற அதிகாரியை நியமித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேச புனருத்தாரணத்துக்குக் கூடிய உதவிகள் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த அதிகாரி உதவுவார் எனவும், இவர் கம்போடியா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் ஜப்பான் அரசாங்கத்தின் விசேட அதிகாரியாக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டில் குடிநீர் விநியோகம் விரிவாக்குவதற்கு நடவடிக்கை!

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

குடாநாட்டு நீர் விநியோகத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும், புதிய நீர் விநியோகத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் உரிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வாகன வசதிகளை வழங்குவதற்கும சபையின் கொழும்புத் தலைமைப்பீடம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

சபையின் யாழ். அலுவலகத்திற்குத் தகுதிவாய்ந்த முகாமையாளா ஒருவரை நியமிப்பதுடன் அங்குள்ள ஏனைய பணிநிலை வெற்றிடங்களையும் நிரப்புவதற்கும் மேற்படி சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (100)

## கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

காரைநகர் பகுதியில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் காரைநகர்ப் பிரதேச விவசாய சம்மேளனம், கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். கட்டாக் காலியாக திரியும் கால்நடைகளை பிடித்து கட்டுப்படுத்த மக்களுக்கு இவர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# மக்களின் தேவைகளை நிறைவேற்றாத பொ.ஐ.முவில் இருப்பது அர்த்தமற்றது

## றிச்சர்ட் பத்திரன அறிவிப்பு

(கொழும்பு)

அக்மீமன தொகுதி வாக்காளர்கள்- கட்சியின் நடவடிக்கை காரணமாக அதிருப்தி அடைந்ததனால் அமைப்பாளர் என்ற பதவியில் தாம் தொடர்ந்து இருப்பது பயனற்ற செயலாகும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அக்மீமன தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பதவியில் இருந்து தன்னை விலக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியானது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தினை ஒரு மாதத்திற்கு முன்பே கட்சியின் பிரதம செயலாளருக்கு அறிவித்திருந்ததாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்காத ஒரு கட்சியை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இரண்டாயிரமாம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்தலில்- பதினொரு மாதகாலத்துள் பொ.ஐ. முன்னணி அரசாங்கம் வீழ்ச்சி கண்டது. இவ்வளவு விரைவாக வீழ்ச்சி கண்ட ஒரு கட்சிக்கு சேவையாற்றுவதில் என்ன பயன் உண்டு எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்!

(கட்டைப்பிராய்)

கட்டைப்பிராயில் மின்சாரம் தாக்கியதில் குழந்தை கணேசு (வயது 56) என்பவர் உயிரிழந்தார். சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

வீட்டிலிருந்த ஒரு கம்பியை எடுத்து வளைத்த பொழுது, அந்த கம்பி வயர் மூலம் இணைக்கப்பட்டிருந்ததால் மின்சாரம் தாக்கியது.

உடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் அங்கு உயிரிழந்தார். நேற்று முன்தினம் -மரணவிசாரணைகளின் பின்னர் உடல் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. அண்மைக்காலத்தில் மின்சாரம் தாக்கிப் பல உயிரிழப்புக்கள் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. (81)

# இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்; குண்டுதாரியுட்பட பதினைந்து பேர் பலி!

(ரெல்அவிவ்)

வட இஸ்ரேலில் நேற்றுமுன் தினம் தற்கொலை குண்டுதாரி ஒருவர் பஸ் மீது மோதியதால் தற்கொலைக் குண்டுதாரி உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல் பரடெஸ் ஹைனா நகர் அருகில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு குண்டுத்தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.



தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான பஸ் தீப்பற்றி எரிகிறது.

இத் தாக்குதலுக்கு இஸ்ரேலிய அரசாங்கம் - யஸீர் அரபாத்தின் பலஸதீன விடுதலை அமைப்பின் மீது குற்றஞ்சுமத்தியுள்ளது. அதே வேளை, யஸீர் அரபாத் இக்குண்டுத தாக்குதலுக்கு இஸ்லாமிய ஜிகாத் அமைப்பே காரணமென கூறியிருக்கின்றார். குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் நடைபெற்ற இரண்டு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் தனது சிரேஷ்ட ஆலோசகர்களை கூட்டி நிலைமையை ஆராய்ந்துள்ளார்.

இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் - மேற்குக் கரையோர நகரங்களில் ஊரடங்கு நேரங்களை தளர்த்தியமையே இவ்வாறான அசம்பாவிதங்களுக்கு காரணமென தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

உலகவலம்

## பாதுகாப்புச் சபையில் ஒருமித்த கருத்துக்கு அமெரிக்கா முயற்சி

(வொஷிங்டன்)

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் வீட்டோ அதிகாரமுள்ள ஐந்து நாடுகளிடையேயும் - ஈராக் விவகாரம் தொடர்பாக ஒருமித்த கருத்தொன்றை உருவாக்குவதில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

முன்னதாக இருந்த தனது இறுக்கமான நிலையைத் தளர்த்திக்கொண்டு ஏனைய வீட்டோ நாடுகளுடன் ஒத்திசைந்து போகும் போக்கையே வொஷிங்டன் கடைப்பிடிக்குமென அமெரிக்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நேபாளிய நடிகை தற்கொலை; பத்திரிகை மீது குற்றச்சாட்டு!

(காத்மண்டு)



நேபாளத்தின் பிரபல நடிகை ஷரிஷா ஹர்கி தற்கொலை செய்துள்ளார். நேபாளிய 'ஜனா அஸ்தா' வாராந்த பத்திரிகையில் மேற்படி நடிகையைப் பற்றிய விவரணக் கட்டுரையையும், நிர்வாணப்படத்தினையும் பிரசுரித்த தாலேயே அவர் தற்கொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.

இதுதொடர்பாக 'ஜனா அஸ்தா' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஷிசோர் ஷெரஸ்தாஹைம் அவரது செய்தியாளர்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பாளர்களையும் கைதுசெய்யுமாறும், பொறுப்பற்ற முறையில் பத்திரிகை நடத்துவதாகவும் ஷரிஷா ஹர்கிக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரிகையாளர், குறித்த பெண் நடிகையின் நிர்வாணப் படத்தை பிரசுரிப்பதாக அச்சுறுத்தியமையே நடிகையின் தற்கொலைக்குக் காரணம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் ஹர்கியின் மரணம் பத்திரிகையின் செயற்பாடுகள் பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. 'ஜனா அஸ்தா' பத்திரிகைமீது கொலைக்கான குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

### அவுஸ்ரேலிய மெல்பேர்ண் நகரில்

## பல்கலைக்கழக விரிவுரையின்போது மாணவன் சூட்டதில் இருவர் பலி!

(மெல்போன்)


அவுஸ்ரேலிய மெல்போன் மாநிலத்தின் மொனாஷ் பல்கலைக்கழக வர்த்தக பீட இறுதியாண்டு மாணவன் குஹன் யங்சியாங்கின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மரணமடைந்தனர். மேலும் ஐந்து பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். பொருளியற்பாட விரிவுரையின் போது ஒரு இயந்திரத் துப்பாக்கியுடனும், ஒரு கைத்துப்பாக்கியுடனும் விரிவுரை மண்டபத்தினுள் நுழைந்து மேற்படி மாணவன் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக தெரியவருகிறது. துப்பாக்கி ஏந்திய மாணவனை மேலும் விபரீதங்கள் நடைபெறாதவாறு சக மாணவர்களாலும் இரு உத்தியோகத்தராலும் கையாளப்பட்ட விதம் குறித்து பொலிஸார் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.



# போரால் சிதைவுற்ற வவுனியா வடக்கின் வேளாண்மை வளமும், வன அழகும்!

**வளமான விவசாய நிலங்களையும், ஏராளம் குளங்களையும், வனவளத்தையும் கொண்டுள்ள வவுனியா வடக்குப் பகுதி தமிழர்களின் மிகப் பெரும் சொத்தாகும். காலத்திற்குக் காலம் அந்நியக் குடியேற்றங்களாலும், தமிழர்கள் தங்கள் நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதாலும், பொலிவிழந்து கிடக்கும் இந்த மண்ணில் மீண்டும் ஒரு புத்துயிர்ப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.**

**- அறிதிரு**



போரால் அழிவுற்ற கட்டடம் ஒன்றின் தோற்றம்.

*(நேற்றைய தொடர்ச்சி)*

நெடுங்கேணி - புதுக்குடியிருப்பு வீதி மிதிவண்டியில் கூட அமைதியாக போக முடியாத அளவு மோசமானதாக உள்ளது. நெடுங்கேணியிலிருந்து கண்டி வீதியை இலகுவாக அடைய இருக்கும் முல்லைத்தீவு புளியங்குளம் B தர வீதி மிக மோசமானதாகவுள்ளது.


இந்த வீதியில் சன்னாசிப்பரந்தன் என்ற இடத்தில் உள்ள கனகராயன் ஆற்றின் மீதான பாலம் பயணிகளுக்கு மரணப் பொறி. இதில் கரணம் தப்பினால் மரணம். பாலத்தின் கீழ் ஆற்றின் படுக்கை 40 அடி ஆழத்தில் உள்ளது. முன்பிருந்த பிரிட்டிஷ் கால பாலத்தால் தமது டாங்கிகள் போகமுடியாது என்பதால், டாங்கிகளுக்காக ஜெயசிக்குறு இராணுவம் அமைத்த பாலம் இது. பாலம் மரணப்பொறியாக இருப்பதால் மக்கள் கனகராயன் குளம் சென்று கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் வழியாக நெடுங்கேணி வரை ஜெயசிக்குறு இராணுவம் அமைத்த புதிய மண்பாதை வழியாக 5 மைல் கூடுதலாக பயணித்து நெடுங்கேணியை அடைகின்றனர். வவுனியாவில் மழை பெய்தால் திடீரெனப் பெருக்கெடுக்கும் கனகராயன் ஆறு அவ்வப்போது - 10 அடி உயரத்துக்கு மேல் பாய இவ்வழிப் போக்குவரத்தும் அடிக்கடி தடைப்படுகின்றது. அப்போது மக்கள், மாங்குளம் - ஒட்டுசுட்டான் வழியாக 20 மைல் கூடுதலாக பயணம் செய்து நெடுங்கேணியை அடைய வேண்டியவர்களாக உள்ளனர்.

கனகராயன்குளம் ஊடாக நெடுங்கேணிவரை ஜெயசிக்குறு இராணுவம அமைத்த வீதியை அங்கீகரித்து - கனகராயன் ஆற்றின்மீது பாலம் அமைத்து அதனைச் செப்பனிட்டுத் தருமாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கேட்டுள்ளதாக உதவி அரச அதிபர் தெரிவிக்கிறார்.

முழுமையான விவசாயப் பிரதேசமான வவுனியா வடக்கின் 90 வீத விவசாயு நிலங்கள் இராணுவத்தால் மண்ணணைகள் போடப்பட்டு நீர்ப்பாசன வடிகாலமைப்புக்கள் குழப்பப்பட்ட நிலையில் இருக்கின்றன. வயல்கள், தோட்டங்கள், குளங்கள் யாவற்றிலும் பயிர்களுக்கு தேவையான வண்டல் மண் இராணுவ புல்டோசர்களால் சுரண்டப்பட்டு அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அந்த வண்டல் மண் அணைகளில் பயனற்ற செடிகள் பசுமையாக, வேகமாக வளர்ந்து நிற்கின்றன. குளங்களின் அணைகள் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டதால் நீர்ப்பாசனம் சீர்குலைக்கப்பட்டுள்ளது. இப் பகுதியின் மிகப் பெரிய குளமான கனகராயன்குளத்தின் அணை சேதமாக்கப்பட்டதால் அதன் நீர்க் கொள்ளளவு குறைவாகவே உள்ளது. இதற்குமப்பால் படையினர் விதைத்த மிதிவெடி, கண்ணிவெடி, பொறிவெடிகள் பயிர் செய் நிலங்களில் மக்களை கால் வைக்க அச்சப்படுத்துகின்றன. இதனால் மக்களின் ஜீவாதாரத் தொழில் கேள்விக் குறியாகி இருக்கிறது.

படையினரின் மண் அணைகளை அகற்றும் நடவடிக்கைக்கு மதிப்பீட்டைத் தருமாறு UNHCR கேட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் கூறியிருக்கிறார். மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இங்கு மிதிவெடி, கண்ணிவெடி, பொறிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 13 கிராமங்கள் அவர்களால் முழுமையாக சுத்தப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அவர்களின் பணி தொடர்கின்றது.




இது இராணுவ முகாமல்ல; வவுனியா வடக்கின் ஒரு பாடசாலை.

போரால் முழுமையாக அழிந்த வன அழகையும் - வேளாண் அழகையும் கொண்டிருந்த வவுனியா வடக்கை முழுமையாக திட்டமிட்டுக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் ஆகியன சிறிய, நடுத்தர நகர்களாக திட்டமிட்டு ஒழுங்காக கட்டியெழுப்ப நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவி நாடப்பட்டுள்ளது.

வவுனியாவில் போரால் முழுமையாக அழிந்த, வவுனியாவின் மிகப் பெரிய உதவி அரச அதிபர் பிரிவா இராணுவ ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் (இன்றும் சுற்றறிக்கையில் வவுனியா மாவட்டத்தில் UNCLEARED AREA) வவுனியா வடக்கு மீளவும் உயிர்பெறத் துடிக்கின்றது.



# மாணவர் மலர்



கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)
பரீட்சை 2002 டிசம்பர்



## தமிழ்மொழியும் இலக்கியமும்

### பயிற்சிப்பரீட்சை பகுதி - III

1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடைதருக?

1. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "....வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு)
என்ன நீங்கான்.
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

(ஆ) "....தர உரிய பொருள் எனக்குத் தாராதேநீ
தனியே இப்பனியிருளில் சவம் கொணர்ந்து
கரவின் அமரல் சுடுவ(து) உனக்(கு) அடைவோ.
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. 'தர உரிய பொருள்' எனக் குறிப்பிடப்படுபவை எவை?

(இ) "கொடுமை இச்சொறகள் என்னைச் சுடுகின்றன"
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. இங்கு குறிப்பிடப்படும் பாத்திரம் எது?

(ஈ) "மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி வாரும் இனித் தருவாரில்லை.
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறில்லை.
தீது செய்வினை யேற்கென் செயல்"
1. இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
2. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
3. யாருக்குக் கூறப்பட்டது?
4. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

(உ) "என்ன மாமா நேரமாகலையா?"
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. இக்கதையின் சுருக்கத்தைத் தருக?

2. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக?

(அ) கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
"இணையிலாதாரை ஈண்ட அமுதுசெய் விப்போம்" என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயில் அகற்ற லுற்றார்.

(ஆ) கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானும் தன்
பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்றகவி.

(இ) ஆயிடைக் கருணை வேற் தாணை மீறிய
தீயரைத் தீச்சிறைப் படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூ லியம்புகின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தி னேனரோ

(ஈ) செயத்தகா மேன்மை வேண்டிச் சேணடைந்துள்ள நொந்து
பயந்தொடுங் கயத்திற் சிக்கிப் பாடுபட் டெழுந்து மன்ன
னயத்திடை யுற்ற நீரி னழுக்கினன் மணிப்பீடத்தின்
வயக்களி றுண்ட வென்னிற் கனியென மான்திருந் தாள்.

(உ) 'அலை(வு) இலா அரிச் சந்திரற்(கு) அல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவதோ? என
உலையின் மீது மெழுகொத்(து) உருகினாள்.

**3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

(அ) நமுறூது மன்னனின் குணவியல்புகள்
(ஆ) "தங்கம்மா" என்னும் பாடத்தின் துன்ப நிலைமையை விளக்குக?
(இ) மூதுரையில் நல்லார் பற்றி ஒளவையார் கூறியவை?

**4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக?**
(அ) உவமைநயம் என்னும் பாடத்தில் உவமைகளாகத் தரப்பட்டவற்றை ஆராய்க?
(ஆ) முடியாத கதைகள் பல என்னும் பாடத்தில் இருந்து பிரஜாவுரிமை பற்றிய கருத்துக்களை விரித்துரைக்க?
(இ) அமுதசுரபி என்ற அட்சயபாத்திரத்தின் சிறப்பை பற்றி விளக்குக?

**5. வள்ளுவரும் பாரதியாரும் என்னும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன தொடர்பாக வள்ளுவர் கூறிய கருத்துக்களை விளக்குக?**
(அ) பொருளிலார்
(ஆ) சினம்
(இ) அறம்

6. "தேவ கிருபையை முன்னிட்டு வாழும்" என்ற சிறுகதையைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?
(அ) இச்சிறுகதையில் இருந்து மகனுக்காக ஏங்கித் தவிக்கும் தாயின் தவிப்புக்களைத் தருக.
(ஆ) இக்கதையின் சுருக்கத்தினை விளக்கி எழுதுக?

7. "இருட்டறை" என்னும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக?
(அ) தள்ளாத வயதிலும் கிழவி தலைநிமிர்ந்து நடக்க காரணமாய் அமைந்தவை எவை?
(ஆ) இக்கதைக்கு இருட்டறை என்னும் தலைப்பு எவ்வளவு பொருத்தமானது?
(இ) சகீனா தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்காமல் விட்டதற்கு காரணம் என்ன? (விளக்குக)

யோ.தர்சினி,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

---

வணிகக்கல்வியும் கணக்கீடும்

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2002 (மாதிரி வினாத்தாள்)

பகுதி-1 நேரம்-1 மணி

✹ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) நுகர்வோர் தாம் பொருட்களை வாங்கக்கூடிய நிலையிலிருப்பது
1. அவர்களுக்கு விருப்பமும், கொள்வனவு சக்தியும் இருக்கும்போது
2. விளம்பரங்கள் மூலம் அவர்களுக்குப் போதிய தகவல்கள் வழங்கப்படும்போது
3. தமது வருமானத்துக்கேற்ப தமது செலவீடுகளையும் திட்டமிட்டுக் கொள்ளும்போது
4. ஒவ்வொரு விற்பனை மையங்களிலும் விற்பனைக்காகப் பொருட்கள் கிடைக்கக்கூடியபோது.

2) கொள்வனவு செய்யும் பொருட்டு நேரம், சிரமம் என்பவற்றினைச் செலவு செய்து விலை, தரம், வடிவம் என்பவற்றினை ஒப்பீடு செய்து வாங்கப்படும் பொருட்கள்
1. வசதிப்பொருட்கள்
2. கடையிலுள்ள பொருட்கள்
3. தனிச்சிறப்பு வாய்ந்த பொருட்கள்
4. நாடாப்பொருட்கள்

3) ஒரு வணிகத்தின் அகச்சூழலாகக் கருதமுடியாதது.
1. உரிமையாளர்
2. வாடிக்கையாளர்
3. வழங்குனர்
4. மக்கள்

4) கேள்விமுறை விற்பனைக்கும், ஏல விற்பனைக்கும் இடையிலான பிரதான வேறுபாடு
1. கேள்விமுறை எப்போதும் கடனுக்கே இடம்பெறும்
2. ஏலவிற்பனை முறையில் கேள்விமுறையைவிட விலை உயர்வாக இருக்கும்
3. ஏலவிற்பனை முறைக்கு விளம்பரம் அவசியம்
4. கேள்விமுறையில் விலையில் இரகசியத்தன்மை

5) பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது கவனத்தில் கொள்ளத் தேவையற்ற விடயம்
1. தரமும் வடிவமைப்பும்
2. விற்பனைச்செலவு
3. வியாபார நிறுவனத்தின் இடவசதி
4. பொருத்தமான வழங்குனரைத் தெரிவு செய்தல்

6) வணிக நிறுவனங்களை தனியார்துறை, பொதுத்துறை என வகைப்படுத்தும்போது கருத்தில் கொள்ளப்படும் பிரதான காரணி
1. நோக்கம்
2. உரிமை
3. மூலதனம்
4. கட்டுப்பாடு

7) 'பண்டங்களுக்காக விளம்பரப்படுத்தல் செலவானது வீண்விரயமானது அன்று' இக்கூற்றினை உண்மைப்படுத்துதற்கான பொருத்தமான கூற்றினைக் கொண்ட தொடரைத் தெரிவு செய்க
1. வருமானம் அதிகரித்தல்
2. கேள்வி அதிகரித்தல்
3. இலாபம் அதிகரித்தல்
4. நிறுவனம் விரிவடைதல்

8) தூரத்தில் உள்ள ஒரு நண்பருக்கு மிகக்குறுகிய நேரத்தில் பணத்தை அனுப்ப நீர்தெரிவு செய்யக்கூடிய ஆவணம்
1. காசோலை
2. தந்திக்காசுக்கட்டளை
3. மாற்றுண்டியல்
4. வங்கிவரைபு

9) ஒரு நிறுவனத்தின் உள்ளகத் தொடர்பாடல் முறைமையில் அடங்குவன
1. அறிவித்தல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், வானொலி
2. சுற்றறிக்கைகள், பிரசுரங்கள், அஞ்சலட்டைகள், அறிக்கைகள்
3. கூட்டங்கள், அறிவித்தல்கள், கடிதங்கள், சுற்றறிக்கைகள்
4. தொலைக்காட்சி, சஞ்சிகைகள், செய்தித்தாள், வானொலி

10) மொத்தவிற்பனையாளர் ஒருவரினால் வர்த்தக உலகிற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு சேவை
1. பண்டங்களின் தரத்தைப் பேணிவரல்
2. பண்டங்களின் விலையில் தளம்பல் ஏற்படாது தடுத்தல்
3. உற்பத்தியாளரின் பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல்
4. சில்லறை வியாபாரிகளுக்கு சிறு அளவுகளில் பண்டங்களை வழங்குதல்

6ஆம் பக்கம் பார்க்க

# Provincial examination for Grade 9

## Model questions

### Test 1

Complete the words selecting the correct group of letters for the blanks from the brackets.

a) Compan - (ian,yan,ion)
b) dialo - (gue,gua,goe)
c) driz - (sel,zal,zle)
d) experie - (nce,rice,rise)
e) temperat - (are,ure,cher)
f) necess - (ory,ery,ary)
g) Marvell - (aus,ous,lus)
h) relati - (vse,ves,wes)
i) conditi - (ans,ens,ons)
j) gener - (elly,olly,ally)

### Test 2

The words and phrases in coloumn A mean much the same as those in Coloumn B. Match them Correctly and put the correct number in the Cages.

A

1) Continuous absence of rain
2) almost
3) tired out
4) Surprised
5) rested
6) be come or made widely Known
7) a person permanently lame
8) was wet throughly
9) got Cought
10) narrow channel or drain
11) Continued
12) with all his strength
13) abandon
14) a person employed to carry luggage in a railway Station / hotel/airport
15) at day break

PN.Shutharson
Vavuniya
Parameswara Vid.

B

a) kept on ☐
b) with all his might ☐
c) ditch ☐
d) at dawn ☐
e) give up ☐
f) porter ☐
g) drought ☐
h) nearly ☐
i) lay down ☐
j) excausted ☐
k) cripple ☐
l) spread through ☐
m) amazed ☐
n) drenched ☐
o) entangled ☐

### Test 3

**select the correct relative pronoun for the blank from the brackets.**

a) The students............scolded you have been punished by the principal (which,who,whose)
b) I didn't hear ........ he said (who,that,what)
c) The producer employes advertising firms ...........task is to promote his products (who,whom,whose)
d) Newspapers regulate the advertisements ................they publish (what,which,who)
e) The students ...........you are teaching are very naughty (which,whom,what)

### Test 4

**A weather bulletin**

**Fill in the blanks selecting the correct word from the box.**

rain
Island
Continue
Pattern
thunder
an in
Showers
Prevail
rains
hours

The ...............are expected to continue for another 24 ........ at least. This ...........of rain may sometimes ................up. to the middle of september, when the present south west monsoonal.......... will come to ........... end occassional .............accompanied by .................... will be experienced in the south west quarter of the ................ today. Scattered thunder showers will ............ over the rest of the country, mainly .................the after noon.

### Test 5

Match the words with their DEFINITIONS. put the letter in the correctcage.

Set1

A) Panel ☐
B) Chair Person ☐
C) Editorial ☐
D) Obituaries ☐
E) Journalists ☐
F) Headlines ☐
G) Classifieds ☐

Set 2

1) Short advertsements in small print giving us information about many Kinds of things and services. ☐
2) The main points or summary of a news item. ☐
3) A small group of people chosen to discuss a subject ☐
4) A person who writes for a newspaper ☐
5) notices of deaths and funerals ☐
6) A lady who presides at a meeting ☐
7) The special article written by the editor of a newspaper on a topic of current interest either local or foreign ☐

### Test 6

Write a paragraph about your favourite sport.

- say whether it's an indoor or an out door game.
- how many players are involved it
- whether girls and boys both can play it
- where it could be played.
- equipment needed to play the game.
- whether one or two persons control the game, how do you call them - refrees or umpires?
- some rules of your favourite sport.

5ஆம் பக்கத் தொடர்ச்சி

11) நேரில் சேவை என்பதனைப் புலப்படுத்தும் உதாரணத்தொகுதி எது?
1. சலவை, முடிதிருத்தல், காப்புறுதி, ஆசிரியர்சேவை
2. போக்குவரத்து, காப்புறுதி தொடர்பாடல், ஆசிரியர்சேவை
3. காப்புறுதி, வங்கித்தொழில், பாதுகாப்பு, தொடர்பாடல்
4. போக்குவரத்து, முகாமைச்சேவை, மருத்துவச்சேவை, சலவை

12) தனிவியாபார நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய காரணி
1. கட்டடவசதி
2. தொழிலாளர் வசதி
3. தொழிலின் தன்மை
4. மூலதன அளவு

13) தொழிற்பிரிப்பின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளுள் ஒன்று
1. உற்பத்தியில் தொடர்ச்சி
2. உற்பத்தி அதிகரிப்பு
3. தரமான பண்டங்களைப் பேணி வருதல்
4. உழைப்பிற்கு உயர்ந்த கூலிகளின் கொடுப்பனவு

14) ஒரு வியாபார நிறுவனம் தனது ஊழியர்களுக்கு அவர்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் விதிகள், பிரமாணங்கள் பற்றிய அறிவினை அளிப்பதற்குப் பின்வரும் முறைகளுள் எதனைப் பிரயோகித்தல் வேண்டும்
1. இன்டர்கொம்
2. தந்திகள்
3. செய்தித்தாள்
4. சுற்றறிக்கைகள்

15) சொந்தக் கம்பனி ஒன்றை ஆரம்பிப்பதற்கு கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கத் தேவை இல்லாத ஆவணம்
1. சட்டபூர்வ உறுதி உரை
2. அகவிதிப்பத்திரம்
3. புறவிதிப்பத்திரம்
4. முன்விபரணம்

16) ஒரு வியாபாரி போதியளவு தொக்குகளை (இருப்புப் பொருள்களை) எப்பொழுதும் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது ஏன்?
1. பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதிலும் பார்க்க பண்டங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் கூடிய இலாபகரமானது
2. தொடர்ச்சியாக வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு
3. வாடிக்கையாளர்களுக்கு கடனுக்குப் பண்டங்களை வழங்குவதற்கு
4. பண்டங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் ஒரு வியாபாரியின் பிரதான தொழிற்பாடாகும்.

17) ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணத்தை நிர்ணயிப்பதில் பின்வருவனவற்றில் எத்தொகுதி கருத்தில் கொள்ளப்படுகின்றது.
1. காப்புறுதியின் பெறுமதி, பால், வயது, காலம்
2. ஆபத்தின் தன்மை, வயது, காலம், உடல்நலம்
3. வயது, காலம், ஆபத்தின் தன்மை, காப்புறுதியின் பெறுமதி
4. காப்புறுதியின் பெறுமதி, ஆபத்தின் தன்மை, உடல்நலம், பால்

18) நுகர்வோர் கல்வி அவசியம் என்பதற்குப் பொருத்தமான கூற்று.
1. வெளியிடங்களில் உள்ள பண்டங்கள் பற்றி அறிதல்
2. நுகர்வோர் கல்வி அறிவின்றிக் காணப்படுகின்றனர்
3. திருப்தியை ஏற்படுத்தும் நுகர்வினைப் பெற்றுக்கொள்ளல்
4. உயர்ந்த கல்வி அறிவுள்ளவர்கள் சகலதையும் அறிந்திருப்பர்

S.K.தவநேசன்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நாடு என்ப நாடா வளத்தன நாடு அல்ல*
*நாட வளந்தரும் நாடு.*

*-திருக்குறள்*

# நமதுநோக்கு

## அடுத்த நகர்வுக்கான அரசின் பொறுப்பு

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழு கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து, நேற்றும் இன்றுமாக - விடுதலைப் புலிகள் தரப்புடனும் தனது சந்திப்பைத் தொடர்ந்து வருகின்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுக்களினூடாக எட்டப்பட்ட ஒத்திசைவான தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றியும், மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப ஏதுவான அத்தியாவசியமான செயற்பாடுகள், முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் இப்பேச்சுக்களில் ஆராயப்படுவதாகத் தெரிகிறது.

வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றங்களைத் துரிதப்படுத்தல், கூட்டுச் செயலணிக்குழு அமைத்தல், அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், கண்ணிவெடிகள் அகற்றுதல் போன்றவற்றைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டு, முடிவுகள் சில வெளிவரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளின் அவசியம் பற்றி, விடுதலைப்புலிகள் உறுதியாக இருந்து வரும் நிலையில் - அரசாங்கத் தரப்பிலிருந்தான பதில்களிலேயே அடுத்தகட்டப் பேச்சுக்களின் முன்னேற்றம் தங்கியிருப்பது வெளிப்படையானது.

சுமுக வாழ்வொன்று ஏற்படும் பட்சத்திலேயே-சமாதானத்தின் உண்மையான விளைவுகளை தமிழ் மக்கள் நேரடியாக அனுபவிக்க முடியும் என்ற நிலையும், அவ்வாறான சூழலொன்றே இனிவரப்போகும் பேச்சுக்களின் மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் என்பதும் - அரசாங்கத்தால் புரிந்துகொள்ளப்படவும், ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டிய மிக முக்கியமான விடயங்களாகும்.

இந்த வகையில்-புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர், இயல்பு வாழ்க்கையை மீளக்கொண்டு வருவதற்கு காட்டப்பட்ட வேகத்தை விட, இன்னும் அதிக வேகத்துடனும், ஆர்வத்துடனும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இராணுவத் தரப்பிலிருந்தும், தெற்கின் அரசியல் எதிரிகளிடமிருந்தும் எழும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே அரசாங்கம் இவற்றை செய்ய வேண்டி இருப்பதை கருத்தில் கொள்ளும் போதும்-உறுதியான சமாதானத்தை நோக்கிய நகர்வுகளுக்கு இந்த நடவடிக்கைகள் அத்தியாவசியமானவையாகவே இருக்கின்றன.

எனவே - இந்த நிலைகளுக்கு மத்தியில், இந்த வாரத்தில் சுமுக வாழ்வுக்கான சில நல்ல முடிவுகளையாவது அரசாங்கத்தரப்பு தரும் என்ற எதிர்பார்ப்புடன் தமிழ்மக்கள் காத்திருக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல்-இந்த முடிவுகளின் பேரில், தாய்லாந்தில் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் இரண்டாம் கட்ட பேச்சுக்களின் முன்னேற்றமான நகர்வுக்கும் அரசாங்கம் வழி சமைத்ததாகவும் இருக்கும்.

இந்த வகையில் - இன்று அல்லது நாளை நோர்வே தூதுக்குழுவினர் வெளியிடப்போகும் செய்திகளே - அடுத்தகட்டத்திற்கு நகர்வதற்கான படிக்கற்களாக அமையப்போகின்றன.

# ஒரே மாதிரியான வழக்குகளில் வெவ்வேறு விதமான தீர்ப்புகள்

## கேள்வியெழுப்புகின்றனர் களுத்துறைச் சிறைக் கைதிகள்

(நமது நிருபர்)

கனகராயன் குளத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதி ஒருவருக்கு ஏழாண்டு சிறைக்காவல் தண்டனை வழங்கப்பட்டிருப்பது அரசாங்கம் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியிருப்பதாக களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

'நமது ஈழநாடு'க்கு அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சகல தமிழ் அரசியற் கைதிகளையும் விடுதலை செய்யும்படி நாடெங்கும் கோரிக்கைகள் எழுந்துள்ள இந்நிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு கனகராயன்குளத்தைச் சேர்ந்த தேவராசா ஜெகதீஸ்வரன் என்பவருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனைத் தீர்ப்பு கடந்த 16 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இவர் 1998 ஓகஸ்ட் 15 ஆம் திகதி தமிழ் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டு மன்னாரில் வைத்து பம்பலப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் விளக்கமறியலில் இருந்த நான்கு வருடங்களும் இரண்டு மாதங்களும் கழிக்கப்படாமலேயே - இன்னும் ஏழு ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நாகொட வைத்தியசாலையிலுள்ள சட்ட வைத்திய அதிகாரி இவர் சித்திரவதை செய்யப்பட்ட அடையாளங்களை பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் மிலிந்த மொறகொட களுத்துறைச் சிறைக்கு வந்து வாக்குறுதி அளித்த பின்னர் குற்றஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்த வழக்கில் எவ்வாறு 7 ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது? இது தமிழ் அரசியல் கைதிகளுக்கு அரசு அளித்துள்ள வாக்குறுதிகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து சாட்சிகள் இன்றி பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறைத்தண்டனை விதிக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ முடியாது.

கடந்த 16ஆம் திகதி உயர் நீதிமன்றினால் நாகமணி தெய்வேந்திரன் என்பவரை மூன்று நீதியரசர்கள் விசாரித்து விடுதலை செய்துள்ளனர். இவரும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மூலமே தண்டனை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது விடுதலை தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும், மனிதஉரிமை அமைப்பினரும், சட்டத்தரணிகளும் உறுதியாக செயற்படுவதன் மூலமே விடுதலையை துரிதப்படுத்தலாம் என நம்புகிறோம்.

கடந்த உண்ணாவிரதப் போராட்ட காலங்களில் வெகுஜன போராட்டங்களுக்கு ஏற்பாடு செய்தவர்கள், பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(01)

# இராணுவ ஆட்சேர்ப்புக்கு இம்முறை புதிய சலுகைகள்!

## லான்ஸ் கோப்ரலாக ஒரு வருடத்தினுள் பதவியுயர்வு

(கொழும்பு)

தற்போது நாடு முழுவதும் இடம்பெற்றுவரும் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் விசேட சலுகைகளை வழங்க இராணுவத் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்து படையில் சேருவோர் ஒரு வருடத்தின் பின்னர் லான்ஸ் கோப்ரல் தரத்துக்கு உயர்த்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் தோல்வியில் முடிந்ததையடுத்தே - தற்போது நடைபெற்றுவரும் ஆட்சேர்ப்பில் அதிக சலுகைகளை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 16ஆம் திகதி முதல் நவம்பர் 16ஆம் திகதி வரையில் இராணுவத்திற்கு 5000 பேரைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

# நிர்வாகக் குறைபாடுகளால் முதலீட்டாளர்கள் பின்னடிப்பு

(கொழும்பு)

178 முதலீட்டுத்திட்டங்களுக்கு இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் முதலீட்டுச்சபை அனுமதி வழங்கிய போதும், அவற்றில் ஆறு திட்டங்கள் மட்டுமே செயற்பட ஆரம்பித்துள்ளதாக முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கு அரசாங்கத்தின் சிக்கலான நடைமுறைகளே முக்கிய காரணம் என முதலீட்டுச்சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முதலீட்டுத் திட்டங்களிலும் பத்துக்கு மேற்பட்ட அரச திணைக்களங்கள் சம்பந்தப்படுகின்றன. இதைவிட நிதிச்சிக்கல்கள், அரசியல் தலையீடுகள் காரணமாகவும் முதலீட்டாளர்கள் முதலிடுவதில் தயக்கம் காட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து கொழும்பு பங்கு விலைகள் வீழ்ச்சி

(கொழும்பு)

கொழும்பு பங்குச்சந்தையில் பங்குகளின் விலைகள் வீழ்ச்சி கண்டுள்ளன. கடந்த வெள்ளியன்று உயர் நீதிமன்றம் 19 ஆவது அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அளித்த தீர்ப்பை அடுத்தே கொழும்பு பங்குச் சந்தையில் பங்கு விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்படலாம் என்பதால் நாட்டின் பொருளாதாரத்தில் சரிவு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்ளவனவு செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

# வங்கிப் பெட்டகங்களில் வெளிநாட்டு நண்பர்களின் பணமும் இருந்ததாம்!

## அனுருத்த ரத்வத்தையின் மனைவி கூறுகிறார்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி வங்கிகளில் கைப்பற்றப்பட்ட 4 கோடி 20 லட்ச ரூபா வைப்புப் பத்திரங்களில் சில வெளிநாட்டில் உள்ள தனது நண்பர்களுக்குச் சொந்தமானது என்று முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் பாரியாரான ரமணி ரத்வத்த இரகசியப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிசார் அவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வங்கிப்பெட்டகங்களில் வைப்புச்செய்வது எல்லோருக்கும் முடியாத செயலென்றும், அதனாலே தனது வெளிநாட்டு நண்பர்களின் வைப்புப்பத்திரங்கள் தனது பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்று ரமணி ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக இரகசியப் பொலிசார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# குறைதீர் மன்றம்

தென்மராட்சி மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கைதடிக் கிராமத்தில் வதியும் எமக்கு 1990 இன் பிற்பாடு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

2000ஆம் ஆண்டு மின்சாரம் வழங்குவதற்காக மின் கம்பங்கள் நாட்டப்பட்டன. மின் பிறப்பாக்கியை வைத்து இயக்கி கைதடிச் சந்திப் பகுதிக்கு மின்சாரம் வழங்கியவேளை, 2000 ஆம் ஆண்டு மீண்டும் போர் ஏற்பட்டு கைதடிக் கிராமம் பாரிய சேதத்திற்குள்ளானது. ஆனால் மீண்டும் சமாதானம் ஏற்பட்டுச் சுமார் ஒருவருட காலமாகியும் மின்சாரம் வழங்கப்படவில்லை. எமக்கு எப்போது மின்சார வசதி கிடைக்கும்...?

எஸ்.கே.ரமணன்,
பொது நூல்நிலைய வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

**நமது ஈழநாடு -**

தங்களது பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுப்பது பற்றி நமது ஈழநாடு, இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்ட போது; இலங்கை மின்சார சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் - தமக்கு கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து 2000, 2001 ஆகிய இரு நிதியாண்டுகளில் எந்தவித நிதி ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை என்று கூறினார். மேலும் இவ்வாண்டில் ஆறு மாதங்களுக்குப் பின்னர் - தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவிப் பிரகாரம் ஒரு சில திட்ட முன்வரைபுகளை இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பணிமனை மேற்கொண்டு வருவதாகக் கூறினார். அத்துடன், தென்மராட்சிப் பகுதிகளுக்கான மின்விநியோகம் - பாரிய திட்டமாக அமைவதால் அதனை மேற்கொள்வதற்கான நிதியை இலங்கை மின்சாரசபை பெற்றுக்கொண்டதும் தங்கள் பகுதிக்கு மின்சார வசதியினை வழங்கமுடியும் என அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஆங்கில மொழி வழியிலான உயர்தரக் கல்வியை உடனடி அமுலாக்குவது மாணவரைப் பாதிக்கும்!

**இலங்கையின் உயர்தரக் கல்வியை ஆங்கில மொழி மூலமாக கொண்டுவரல் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழி போதனா நிலையத் தலைவர் எஸ்.ஜி. சிவகுருநாதர் எம். ஏ. அவர்களுடனான சந்திப்பு இது.**

**○ கேள்வி:- ஆங்கில மொழியையோ அல்லது ஒரு மொழியையோ கற்க எது மிகவும் அவசியம் எனக் கருதுகின்றீர்கள்?**

○ *பதில்:*-பிள்ளையின் அறிவமைப்பு, மனபாங்குத் தன்மை குடும்ப பின்புலத்தாலும் சூழலாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. இத் தன்மையில் பிள்ளையின் குடும்ப கட்டமைப்பும், சமூகக் கட்டமைப்பும் மொழி விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவை பிள்ளைக்கு சாதகமாக அமையும்போது மொழியைக் கற்கவோ, விருத்தி செய்து கொள்ளவோ முடிகின்றது.

**○ கேள்வி:- ஆங்கில மொழி சார் புலமை ஏன் அவசியம் என நினைக்கின்றீர்கள?**

○ *பதில்:*- கல்வியறிவு உடையவர்க, துறைசார் நிபுணராக திகழவும், உலகச் செல்நெறிகளுக்கு இசைந்து செல்லவும்,புதிய விடயங்களை உள்வாங்கிக் கொள்ளவும், தொடர்புகளைக் கட்டியெழுப்பவும், சவால்களை எதிர்கொள்ளவும், எமது சமூகம் எந்தவிதத்திலும் மற்ற சமூகத்தவருக்கு சளைத்தவரல்ல என்பதையும் இதனால் வெளிக்காட்ட முடியும்.

**○ கேள்வி:-எந்த வயதில் ஒரு பிள்ளை மொழி தொடர்பான எண்ணக்கருவை விருத்தி செய்து கொள்ள முடிகிறது?**

○ *பதில்:*-மொழிவிருத்தி என்பது எல்லா வயது மட்டங்களிலும் இடம்பெறும் அம்சமல்ல. குறிப்பாக மொழி தொடர்பான திறன்களை 12-14 வயதுக்கு முன் வளர்த்துக் கொள்கின்றது. அதன் பிறகு மொழி வளர்ச்சி படிப்படியாகவே ஏற்படுகின்றது. இங்கு உயர் கல்வியை பொறுத்தமட்டில் இப்பண்புகளை கருத்தில் கொள்வது அவசியம்.

**○ கேள்வி:-உயர்தரக் கல்வியில் ஆங்கிலம் மூலமாக பாடங்களைக் கற்பது எந்தளவுக்கு சாத்தியமாகும்?**

○ *பதில்:*-முன்னர் குறிப்பிட்ட வயது அடிப்படையில் நோக்குகின்ற போது உயர்தர வகுப்பினர் ஆங்கில மொழி மூலமாக கற்பது கடினமான விடயம். இருந்தாலும் மொழி தொடர்பான விருத்தியை முயற்சி, ஆர்வம், ஊக்கம் என்ற அடிப்படையில் விருத்தியடையச் செய்யலாம்.

ஒப்பீட்டு அடிப்படையில் ஆங்கில மொழி மூலம் பாடசாலையில் கற்ற மாணவன் ஒருவனுக்கும், பல்கலைக்கழகத்தில் முதலில் ஆங்கிலமொழி மூலம் கற்கும் மாணவனுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. பாடசாலையில் ஆங்கிலத்தில் படித்த ஒருவர் விரைவில் ஆங்கில விரிவுரையைக் கிரகிப்பார்.

**○ கேள்வி:-ஆங்கில மொழி மூலமான கற்கையை உயர்தரத்தில் அமுலாக்காமல் எப்பொழுது அமுலாக்கலாம் என எதிர்பார்க்கிறீர்கள்?**

○ *பதில்:*- ஆரம்ப நிலை பாடசாலையூடாக தரம் ஒன்றிலிருந்தே ஆங்கில மொழி தொடர்பான திறன்களை அவர்களுக்கு உரிய பாடத்திட்டம் , கற்பித்தல் முறைமைகள் ஊடாக இலகுவாக அமுலாக்க முடியும் என்பது எனது கருத்து. அத்துடன் இந் நிலையில் ஆரம்பிப்பது மாணவனுக்கு மொழி ஒரு பிரச்சினையாக அமையாது. இலகுவாக அமையும்.

**○ கேள்வி: போர்காலச் சூழலால் யாழ்ப்பாணத்து ஆங்கில மொழி விருத்தியில் தடைகள் ஏற்பட்டனவா? அதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

○ *பதில்:*- இல்லை, போர்ச் சூழலுக்கும் மொழி மேம்பாட்டுக்கும் இடையில் தொடர்பு இல்லை. எம்மைப் பொறுத்தமட்டில் மொழியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இன்மையே மொழி விருத்திக்கான தடை ஏற்படக் காரணம்.

தேசிய மொழிமீதான பற்றின் காரணமாக ஆங்கில மொழியை ஏற்கப் பின்னிற்கின்றோம். இந் நிலை மாற்றப்பட வேண்டும். மொழியை ஏற்பது வேறு, மொழியைக் கற்பது வேறு. மொழி ஒன்றைக் கற்கலாம். அதனை ஏற்பது ஏற்காமல் விடுவது அவரவர் இயல்பைப் பொறுத்ததாகும். எத்தனை மொழிகளை நாம் கற்றிருக்கின்றோமோ அவ்வளவுக்கு எங்கள் கல்வி மேம்படும் என்பது எனது கருத்து.

**○ கேள்வி:- ஆங்கில மொழி மூலமான கல்வியை அமுலாக்குவதால் தாய் மொழி எந்தளவிற்கு பாதிப்படையும் என கருதுகிறீர்கள்?**

○ *பதில்:*- ஆங்கில மொழி மூலமான கல்வியை அமுலாக்குவதால் தாய்மொழி எப்பொழுதும் பாதிப்படையாது. எம்மைப்பொறுத்தமட்டில் ஆங்கிலம் எப்பொழுதும் இரண்டாம் மொழியே. இதில் கருத்து முரண்பாடு ஒருகாலமும் இருக்கக் கூடாது. சுயமொழியில் தேர்ச்சி இருக்கும் பொழுதுதான் ஏனைய மொழிகளில் புலமை பெற முடியும்.

தாய்மொழி மீது பாதிப்போ அல்லது பின்னடைவு ஏற்படாது என்பதற்கு கடந்த காலம் எமக்குப் பாடம். ஆங்கில மொழி பிரதான மொழியாக இருந்த காலகட்டத்தில் தமிழ் மொழி பின்னடைவு பெறவில்லை. அப்பொழுதுதான் தமிழ் மொழிசார் புலமையாளர்கள் பலர் வாழ்ந்தார்கள். பின்னர் தமிழ் மொழி மூலமாக கொண்டு வரப்பட்ட பின்பு தமிழ் புலமையாளர் குறைவடைந்துவிட்ட தன்மையையும் ஒப்பு நோக்கலாம்.

**○ கேள்வி:- உயர்தரத்தில் ஆங்கில மொழியை அமுலாக்குவதற்கு பாடசாலைகளில் ஆளணி வளம், பௌதீக வளம் சாதகமாக அமையுமா?**

○ *பதில்:*- இல்லை என்றே கூறலாம். நகர பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் ஆங்கில ஆசிரியர்களை ஓரளவிற்கு பெற்றுக்கொள்ள முடிகிறது. கிராமப்புறப் பாடசாலைகளில் அவ்வாறு பெற்றுக்கொள்வது கடினமாகவே உள்ளது.

அத்துடன் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் ஆங்கில மொழிசார் புலமை மிகத் தாழ்நிலையில் உள்ளது. இந்தநிலை மாற வேண்டும்.

**○ கேள்வி:- தற்சமயம் யாழ்.நகரப பாடசாலைகள் சிலவற்றில் ஆங்கில மொழி மூலமாக பாடப்புலங்களைக் கற்றல், கற்பித்தல் இடம்பெறுவதைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

○ *பதில்:*- இந்த விடயம் வரவேறகப்பட வேண்டிய விடயம். ஆரம்ப நிலைகளிலும், இடைநிலைகளிலும் கற்பிக்கப்படுவது எதிர்காலத்தில் சிறப்பான விளைவைத் தரும். ஆனால் உயர்நிலை மட்டங்களின் வெளியீடுகள் எப்படி இருக்கும் எனக் கூறமுடியாது. பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும். இது. மாணவர்களின் தன்னம்பிக்கையைப் பொறுத்த விடயம்.

**○ கேள்வி:- உயர்தர வகுப்புக்களில் தற்சமயம் ஆங்கில வகுப்புகள் ஒழுங்காக பாடசாலைகளில் இடம் பெறுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?**

○ *பதில்:*- அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்றே நினைக்கிறேன். ஆனால், இது எல்லாப்பாடசாலைகளுக்கும் பொருந்தாது. யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங் பாடசாலைகளில் மாணவர் மத்தியில ஆங்கில மொழிஅறிவினை விருத்தி செய்வதற்கு யாழ்.கல்வித் திணைக்களம் பல்வேறு மட்டங்களில் முயற்சி மேற்கொள்கின்ற போதிலும் தகைமை பெற்ற ஆசிரியர்களின் பற்றாக்குறை, பாடநூல்கள் உரிய நேரத்திற்கு வராமை போன்ற இதர காரணங்கள் திணைக்களத்தின் முயற்சிக்குச் சவாலாக உள்ளது.

**○ கேள்வி:- இதற்காக அரசாங்கம என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

○ *பதில்:*- தகைமைசார் ஆங்கில ஆசிரியர்களை உருவாக்குவதில் அக்கறைகொள்ள வேண்டும் எனவும், ஆங்கில மொழிசார் மேம்பாட்டு செயலமர்வுகள், கருத்தரங்குகளை பல்வேறு கல்வி நிறுவனங்களின் ஒன்றிணைப்புடன் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும் எனவும் கருதுகின்றேன்.

மேலும் - குடும்பப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ஆங்கில மொழி ஆளணியினரைப் பகிர்ந்து பயன்களைப் பெற ஒழுங்கமைப்புச் செய்வதோடு விசேட ஊக்குவிப்பையும் வழங்குதல் பொருத்தமாக அமையும்.

**○ கேள்வி:- அரசாங்கம் ஆங்கில மொழி விருத்திக்காக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தது எனவும், எடுக்கவிருக்கிறது எனவும் கூறமுடியுமா?**

○ *பதில்:*- 1976களில் ஆங்கில மொழியின் முக்கியம் உணரப்பட்டு பல்வேறு வெளிநாட்டு அரசாங்கங்களின் உதவியுடன் ஆங்கில நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்ததுடன் அவற்றுள் சில நடைமுறைப்படுத்தப்பட்டன.

பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்களினால் ஆங்கில மொழிசார் மேம்பாடுகள் தளர்வுற்று, பின்னர் 1998 இல் நவீன சீர்திருத்தக் கட்டமைப்பின் ஊடாக ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்விவரை பல செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டன.




பாடநூல்களை மாற்றியமைத்தல், ஆசிரியர் வாண்மை விருத்தி, ஆங்கில மொழிசார் கற்றல், கற்பித்தல் முறைமைகள் மாற்றம் என்பன இடம்பெற்றதுடன் உயர்தர வகுப்பின் பல்கலைக்கழகத் தெரிவிற்கு எதிர்காலத்தில் ஆங்கிலம் கட்டாய பாடப்புலமாக கொண்டுவர இருப்பது அரசாங்க முயற்சிக்கு நல்ல எடுத்துக்காட்டு எனலாம்.

**○ கேள்வி:- யாழ்ப்பாணத்தின் முனனர் நிலவிய மொழி விருத்தி நிலைக்கும், தற்கால மொழி விருத்தி நிலைக்கும் இடையிலான வேறுபாடு யாது?**

○ *பதில்:*- முன்னர் சிறப்பான மொழிப்பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு பிரிவினர் இருந்தனர் என்றே கூறலாம். தமிழ்மொழி மட்டுமன்றி சமஸ்கிருதம், ஆங்கில மொழிசார் புலமையாளர் வாழ்ந்தனர். தனியே ஒரு மொழியன்று பலமொழித் தேர்ச்சியாளராக அவர்கள் விளங்கினர். தமிழ் பண்டிதர் ஒருவருக்கு சமஸ்கிருதம், ஆங்கிலம் உயர்வாக காணப்பட்டது. இன்று அந்த நிலை மாறிவிட்டது. மொழியை ஒரு விருப்புப் பாடமாக மாணவர் மத்தியில் கற்க வழிவகை செய்ய வேண்டும். ஒரு சில மாணவருக்கு இந்த ஆற்றல், விருப்பு இருக்கின்றது.

**○ கேள்வி:- ஒருவனுடைய வாழ்க்கை உயர் நிலைக்கு செல்ல கல்வியறிவு மட்டும் போதுமா? மொழி அறிவும் தேவையா?**

○ *பதில்:*- கல்வியறிவால் மட்டும் ஒருவர் உயர்நிலைக்குச் செல்ல முடியாது. துறைசார் நிபுணத்துவம் பெறமுடியாது. சேர்.பொன். இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோர் சாதனையாளராகத் திகழ ஆங்கில மொழிசார் புலமையே காரணம்.

மொழி அறிவு ஒருவனுக்கு மிகுந்த தன்னம்பிக்கையை அளிக்


எஸ்.ஜி.சிவகுருநாதர்

கின்றது. இன்றைய பட்டதாரிகள் மத்தியில்கூட மொழி அறிவு குறைவாக இருப்பதால் தன்னம்பிக்கை குறைந்து தாழ்வு மனப்பாங்கை கொண்டு இருப்பதுடன் எந்த ஒரு தொழிலையும் துணிந்து செய்யும் தன்மை குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். நிர்வாகப் பதவிகளை ஏற்க தயங்குகிறார்கள். வருந்தத்தக்க விடயமாக காணப்படுகிறது.

**○ கேள்வி:- உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் சார் பாடப் புலங்களை கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி அறிவு உண்டு என் பதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா?**

○ *பதில்:*- ஒப்பீட்டளவில் மற்றைய துறைகளிலும் பார்க்க மேம்பட்டு இருக்கிறார்கள். ஆனால் மருத்துவத் துறையில் கற்கும் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக ஆங்கில மொழியில் வசனம் எழுத முடியாத சந்தர்ப்பங்களையும் என்னால் அவதானிக்க முடிந்தது. இது எனது அனுபவத்தில் கண்டது.

**○ கேள்வி:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆங்கில மொழி மேம்பாட்டுக்கு என்ன பங்களிப்பு செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றீர்கள்?**

○ *பதில்:*- இதற்கு சிறப்பான வழியாக பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட மாணவர்களை ஆங்கில மொழியில் புலமையாக்கி வெளியீடு செய்ய **English Language Teaching Center** என்ற எங்களுடைய பிரிவு தீர்மானித்துள்ளது. இதன் சாதகத் தன்மை பல்வேறு சமூகத்தின் ஒத்துழைப்பை பொறுத்துள்ளது. இந்த விடயத்தில் கலைப்பீடாதிபதியும், துணைவேந்தரும் எங்கள் துறையின் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குகின்றனர். இப்பொழுது கல்விசார் சமூகத்தில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கிறது.

**○ கேள்வி:- பல்கலைக்கழகத்தை பொறுத்த மட்டில் நூலகத்தில் மாணவர்கள் ஆங்கில நூல்களை வாசிக்கும் தன்மை உள்ளவர்களா?**

○ *பதில்:*- இல்லை. மாணவர்கள் நூலகத்தின் ஆங்கிலப் பிரிவுக்கே செல்வதில்லை. அத்துடன் ஆங்கில புத்தகங்களை இரவல் பெறுவதும் இல்லை என்பதை இனங்கண்டு கொள்ள முடிகிறது. ஆங்கிலம் தெரிந்த ஒரு மாணவன் சுயமாக இயங்கவும், மற்றவர்களிடம் தங்கி இருக்காத நிலையும் உருவாகும் என்பது எனது கருத்து.

**○ கேள்வி:- யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறை, விஞ்ஞானத்துறை , வணிக முகாமைத்துவப் பிரிவுகள் ஆங்கில மூலமான கற்கையாக மேற்கொள்ளும் பொழுது கலைத்துறை மட்டும் இதனை ஏன் மேற்கொள்ளவில்லை?**

○ *பதில்:*- கலைத்துறையை பொறுத்தமட்டில் மாணவர்களின் ஆங்கிலமொழி ஆற்றலும், குடும்பப் பின்புல புலமையும் திருப்தி இன்மையே நிலவுகின்றது. இதனால் இதனை உடனடியாக செயற்படுத்த முடியாதுள்ளது. பல தசாப்தங்களாக விடுபட்ட ஒரு விடயத்தை ஒரு நாளில் செய்ய முடியாது. இப்போது நடக்க இருப்பது ஒரு நல்ல பாதைக்கான முன்முயற்சியே.

**○ கேள்வி:- உயர்தரத்தில் ஆங்கில மொழியை பிரதானமாக கொண்டு வருவதையிட்டு என்ன கருத்து கூற விரும்புகிறீர்கள்?**

○ *பதில்:*- நல்லவிடயம், ஆனால் உயர்தரத்தில் கொண்டு வருவதால் உயர்தரப் பரீட்சை போட்டித்தன்மை வாய்ந்தமையால் - உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் பல்கலைக்கழக அனுமதியில் சமச்சீரற்ற தன்மை ஒன்றை ஏற்படுத்த வாய்ப்புண்டு. ஆரம்ப வகுப்பில் இருந்து படிப்படியாக இவ்வறிவை வளர்க்க வேண்டும். இதனால் அவர்களுக்கு அதிக நம்பிக்கையுடன் கல்வியில் ஈடுபட முடியும். இவ்வறிவு இல்லாமல் கல்வியில் சாதனை படைக்க முடியாது.

இந்த விடயத்தில் புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் ஆங்கில மொழி மூலம் படித்த தமிழர்கள் அந்த நாட்டு அரசாங்கங்களுக்கு அந்தந்தத் துறையில் நிபுணத்துவ ஆலோசகர்களாக விளங்குகின்றார்கள். இதனால் மொழி கற்பதொரு பெரிய விடயமல்ல. ஆனால் நாம் அதை பெரிய பூதாகரமாக நினைப்பதால்தான் அது ஒரு பெரிய விடயமாக எங்களுக்கு தெரிகிறது என்பது எனது கருத்து.

**○ கேள்வி:- அண்மையில் நீங்கள் இந்தியாவில் கலாநிதிப் பட்டப்படிப்புக்காக சென்று வந்தமையினால் அங்குள்ள ஆங்கில மொழி அறிவு மட்டத்திற்கும், யாழ்ப்பாணம் அல்லது இலங்கையின் ஆங்கில மொழி அறிவு மட்டத்திற்கும் இடையிலான தன்மைகள் எவை எனக் கூறமுடியுமா?**

○ *பதில்:*- இந்தியாவை பொறுத்த மட்டில் இந்தியாவில் உள்ளவர்கள் ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சியில் உயர் நிலையிலேயே உள்ளனர். அங்கு பாடசாலை ஒன்றில் தரம் 4 இல் படிக்கும் மாணவன் ஆங்கிலத்தில் உரையாடும் ஆற்றலுக்கு எங்களுடைய பல்கலைக்கழக மாணவர்கள் நிகராக விளங்கவில்லையே என்று நான் மனவருத்தப்படுகிறேன்.

அங்குள்ளவர்களுக்கு குறைந்தது நாலு மொழியாவது பேசத் தெரியும். சாதாரண ரிக்ஷா வண்டி ஓட்டுனரே இவ்வறிவை கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

இங்கு பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்கும் சூழல் இல்லை. இவர்களுக்கு பாடசாலையில் கற்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. இதில் ஒன்று முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும். என்னவென்றால் ஒரு மாணவன் ஆங்கிலமொழி அறிவுடன் பல்கலைக்கழகத்துக்கு வருவதால் பல்கலைக்கழகப் பயன்பாட்டினை முழுமையாகப் பெற முடியும். அதற்கு மாறாக இங்கு வந்து முதலில் ஆங்கிலம் படிப்பதால் அவர் அந்த பயன்பாட்டை முழுமையாக அடைவதில்லை. அவர் ஆங்கிலம் கற்று முடிய அவர்களுடைய பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்துவிடும். இது மாணவர்களுடைய தவறல்ல. அடிக்கடி மாறுபட்டு வரும் கல்விக் கொள்கைகளால் மாணவர்களது கல்வி அமைப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் அரசாங்கம் திடமான கல்வி மொழிக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**நேர்காணல்: ப.இராஜேஸ்வரன்**

*இந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான வாசகர்களது கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. அவை தொடராக எமது பத்திரிகையில் வெளியிடப்படும். - ஆசிரியர்.*

# உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்புடன் தமிழர் விடுதலையை முழுமைப்படுத்துவோம்!

## மானுடத்தின் தமிழ்க்கூடல் இறுதி நிகழ்வில் பிரகடனம்

(நமது நிருபர்)

தமிழ் மக்களின் விடுதலையை எல்லாத் தளங்களிலும் முழுமைப் படுத்துவதுடன், உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஒருங்கிணைப் பைப் பெறுவது என நேற்று முடிவ டைந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002 இல் பிரகடனம் செய்யப் பட்டது.

நேற்று ஒன்றுகூடல் முடிவ டைந்தபோது - இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது. ஒன்றுகூடலின் ஒருங்கிணைப்பாளர் மகிழன் இப்பிர கடனத்தை வெளியிட்டார்.

இப்பிரகடனத்தின் முழு விவர மும் வருமாறு:-

முதலாவது பிரகடனம் - தமிழ் மக்களின் விடுதலையை எல்லாத் தளங்களிலும் முழுமைப்படுத் துவது. இதில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஒருங்கிணைப் பைப் பெறுவது.

இரண்டாவது பிரகடனம - இரண் டாயிரம் ஆண்டுகால செய்யுட் பாரம் பரியம் உடைய தமிழ்மக்களாகிய நாம் - தமிழ் விழிப்பையும், தமிழ் வேர்களையும் மூன்றாவது மிலேனி யத்துக்கு - அதாவது தகவல் யுகத் துக்கும் விரிவுபடுத்தல்.

இந்த இரண்டு முதன்மைப் பிர கடனங்களையும் நிறைவேற்றுவதற் குரிய முன்னெடுப்புக்களாவன -

★ உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற் கான "தமிழ் மையம்" ஒன்றை ஈழத் தில் நிறுவுதல். தமிழ்த் தேசியம் எதிர்கொள்கின்ற அரசியல், பண் பாட்டு நெருக்கடி நிலைகளில் இருந்து விடுபடுவதற்கான சமூகச் சிந்தனை முறைமைகளை உருவாக்குவதற்கும் அதை நடைமுறைப் படுத்துவதற்கு மான "சிந்தனைப் பள்ளி"யை - School of Thoughts கட்டமைத்தல். இதற்கு வேண்டிய துறைசார் - குறிப்பாக முறைசார், முறைசாராத நிபுணர்களை ஒருங்கிணைத்தல்.

★ உலகமயமாக்கல் சூழலில் தமிழ் - முஸ்லிம் மக்களின் பண் பாட்டு அடையாளங்களைப் பாது காத்தலும், புதுப்பித்தலும்.

★ தமிழ் - சிங்கள தொடர் பாடலை பரஸ்பர மொழிபெயர்ப் புக்களின்மூலம் வலுப்படுத்தல்.

★ போருக்குப் பிந்திய காலத் தின் உடனடித் தேவையாக வடக்கு - கிழக்கின் அனைத்துப் பகுதிகளி லும் எல்லாவகையான வெளிப் பாட்டு வடிவங்கள் பற்றிய ஆவணப் படுத்தலையும் பாதுகாத்தலையும் உடனடியாகச் செயற்படுத்தல். இதில் நாட்டார் பாடல்கள் முதல் அரும் பொருட்கள்வரை அடங்கும்.

★ அருகியும், அழிந்தும் செல் லும் நிலையிலிருக்கும் பாரம்பரியக் கலை வடிவங்களை, புராதனச் சின் னங்களை அடையாளங்கண்டு மீட் பதற்கும் பாதுகாப்பதற்குமான நிறு வனமயப்பட்ட ஏற்பாடுகளை திட்ட மிடுவதும், நடைமுறைப்படுத்துவ தும்.

★ வருடம்தோறும் இத்தகைய தமிழ்க்கூடலை வெவ்வேறு இடங் களில் தொடர்ந்து ஒழுங்குசெய்தல்.

★ இவை அனைத்தையும் நடை முறைப்படுத்துவதற்கு தமிழ்மக்க ளுடைய இராணுவ நெருக்குவார மற்ற மெய்யான இயல்பு வாழ்வு இன்றியமையாததாகும். அதனைக் கொண்டுவரும் முயற்சிகளை அனைத்து ஊடகவியலாளர்களும், கலை - இலக்கியவாதிகளும் முன் னெடுத்தல், ஒன்றிணைந்து செயற் படுத்தல் என்பனவாகும்.

## ஊடகவியல், தொல்பொருளியல் குறித்து ஆராயப்பட்ட இறுதிநாள் அமர்வுகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைப் பண்பாட்டுக் கழகம் நிதர் சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல்-2002'இன் இறுதி நாள் நிகழ் வுகள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் நாட்டுப் பற்றாளர் திருமதி வள்ளியம்மை இராசலிங்கனும், இரா.நாகமணியும் ஈகச்சுடரை ஏற்றி வைத்தனர்.

விழாச்சுடரை எஸ்.பி.சாமி, ஈ.சரவணபவன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநகரசபை உறுப்பி னர் அரவிந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

நிதர்சன நிறுவனப் பொறுப்பா ளர் சி.சேரலாதன் வரவேற்புரையாற் றியதைத் தொடர்ந்து மு.திருநாவுக் கரசு 'சர்வதேச அரசியலும் சிங்கள உயர் குழாமும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

காலை 10 மணிக்கு காண்பியக் கலைகள் அமர்வு ஆரம்பமாகியது. இந்த அமர்விற்கு ஓவியர் ரமணி தலைமை தாங்க, கட்டுரையாளர் பா.அகிலன் 'கலையும், சிறுபான்மை யினரும் - ஈழத்தமிழர் காண்பியக் கலைகளின் பகிரனுபவம்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் ப.புஸ்பரட்ணம் 'ஈழத்தமிழர் வரலாற்று மீளக்கண்டு பிடிப்பில் தொல்பொருட்களும் அவற் றின் பாதுகாப்பும்' என்ற கருப்பொரு ளில் உரையாற்ற - கோபாலி, சனா தனன் ஆகியோர் குறிப்புரையாற்றிய தைத் தொடர்ந்து காலை அமர்வு கள் மதியம் 12.30 மணிக்கு நிறைவு பெற்றன.

இவற்றையடுத்து மதியம் 12.45 மணியளவில் மானுடத்தின் தமிழ்க் கூடல் -2002இன் ஞாபகமாக வீரசிங் கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப் பட்டவர்களின் நினைவுச் சின்னத் திற்கு அருகில் மரநடுகை வைபவம் இடம்பெற்றது.

இம்மரம் நடும் வைபவத்தில் மரக்கன்றுகளை நாட்டுப்பற்றாளர் திருமதி.வள்ளியம்மை இராசலிங் கன், ராவய பத்திரிகை உதவி ஆசிரியர் மஞ்சுள வெடிவர்த்தன, மன்னார் கலைஞர் செபஸ்தியன் செபமாலை, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் எ.எல்.எம். சலீம், வீரசிங்கம் மண்டப முகாமை யாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகி யோர் நட்டனர்.

இந்த வைபவத்தையடுத்து மதிய போசன இடைவேளை வழங்கப்பட்டு பின் மாலை அமர்வுகள் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் ஊடகம் என்ற தலைப் பிலான அமர்வு இடம்பெற்றது. இதற்கு வி.ரி.தமிழ்மாறன் தலைமை தாங்கினார். இதில் ஆ.சிவநேசச் செல்வன் 'தேசிய இன முரண்பாட் டுப் பின்னணியில் தொடர்பு ஊட கப்பண்பாடு' என்ற தலைப்பிலும், பா.சிவகுமார் 'ஊடகப் பண்பாடும் இன்றைய உலகமயமாக்கலின் அரசி யலும்' என்ற தலைப்பிலும், மஞ்சுள வெடிவர்த்தன 'இன ஒடுக்குமுறை யும் சிங்களப் பத்திரிகைகளும்' என்ற தலைப்பிலும், அமரதாஸ் 'உலகளாவிய ரீதியிலும் ஈழப்போர் காலத்திலும் ஒளிப்படக் கலையின் இயங்குநிலை' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

இவ் அமர்வின் குறிப்புரைகளை எஸ்.எம். கோபாலரத்தினம், சி.ரகு ராம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இவற்றைத் தொடர்ந்து மானு டத்தின் தமிழ்க்கூடல் - 2002இன் இறுதி நாள் சிறப்புரைகளை அமைச்சர் சந்திரசேகரனும், தமிழ கத்திலிருந்து வருகை தந்த விடு தலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழக சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவள வனும் நிகழ்த்தினர்.

மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002இன் இறுதிநாள் நிறைவுரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப் பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். இறுதியாக கலை நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் அண் ணாவியார் யோகனின் நெறியாள் கையில் உருவான அருச்சுனன் பெற்ற பாசுபதம் என்ற வடமோடிக் கூத்தினை மட்டக்களப்பு சீலாமுனை கலைக் கழகம் வழங்கியது. இதனையடுத்து மானுடத்தின் தமிழ்க்கூடல் -2002 இன் நிகழ்வுகள் வெகுசிறப்பாக நிறைவடைந்தன.

(லி)

## தமிழக அறிஞர் பங்கேற்கும் 'உலக அரங்கில் தமிழ்'!

### கைலாசபதி கலையரங்கில் இன்று

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் - தமிழ கத்திலிருந்து வருகைதந்துள்ள அறிஞர்கள் பங்குபற்றும் 'உலக அரங்கில் தமிழ்' என்னும் கருப் பொருளிலான கருத்தரங்கு இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் தமிழ்த்துறையினால், பேராசிரி யர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் - வரவேற்புரையை கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும், தொடக்கவுரையை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை யும், வாழ்த்துரையை பேராசிரியர் பொ.கோபாலகிருஷ்ண ஐயரும் வழங்கவுள்ளனர்.

கருத்துரைகளை தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர் இரா.திருமாவள வன், திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், ஓவியர் ட்ராட்ஸ்கி மருது, எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், கவி ஞர் இன்குலாப் ஆகியோர் வழங்குவர்.




பத்திரிகையாளர் நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்தும் ஊடகவியலாளர்கள்.







விழா மேடையில் திருமாவளவன், புதுவை.






அமைச்சர் சந்திரசேகரன்




மகிழன்




எஸ்.எம்.கோபாலரட்ணம்




சிவகுமார்




ராதாகிருஷ்ணன்



வி.ரி.தமிழ்மாறன்



பேராசிரியர் அ.சண்முகதாஸ்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிங்களவரைவிடத் தமிழரே இந்த தேசத்தை நேசித்தனர்



நேற்று விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர், மற்றும் அவரது குழுவினர்.

(யாழ்ப்பாணம்)

இந்த தேசத்தை தமிழர் நேசிப்பதைப்போல சிங்களவர் நேசிக்கவில்லை. தமிழர்கள் மிகவும் அற்புதமாக இந்த தேசத்தை நேசிக்கின்றார்கள். இதற்காக சிங்கள அரசுகள் எமக்குத் தந்த பரிசு என்ன? என்பதை இங்கு வந்திருக்கும் சிங்கள நண்பர்கள் பார்த்திருப்பார்கள். சிங்கள தேசத்தை நோக்கி நாங்கள் நீட்டுகின்ற நட்புக்கரங்களைப் புரிந்து கொள்ளுங்கள், அறிந்து கொள்ளுங்கள். இன்னும் காலம் கடந்து விடவில்லை. நீங்கள் அனுபவிக்கின்ற அச்சமின்றிய, பிரச்சினையின்றிய, சுபீட்ச வாழ்வை அதே தன்மையுடன் எங்களையும் வாழவிடுங்கள். உங்களுடன் சேர்ந்து

## புதுவை இரத்தினதுரை பேச்சு




வாழ நாம் தயார்-

இவ்வாறு விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

மானுடத்தின் தமிழ்க்கூடல் இறுதி நாள் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது- நாம் இருபத்தைந்து வருடமாக யுத்தத்தில் நிற்கின்றோம். இக்காலப் பகுதியில் நாம் பட்ட வேதனை யாரும் அறியாதது. இந்திய இராணுவம் என்ற வடிவில் ஒட்டுமொத்தமாக இலங்கைக்கு வந்த ஆபத்தை நாம் தடுத்து நிறுத்திப் போராடினோம்.

நாம் அனைவரும் ஒரு குடும்பமாக வாழ முடியுமா? அல்லது மனது அறிந்த நல்ல அண்டை வீட்டுக்காரனாக வாழ முடியுமா? என்று சிங்கள மக்கள் ஆறஅமர இருந்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# உலகத் தமிழர்களுக்கு......

ஈழத்தமிழன் எப்படியிருப்பான் என்றால் அவன் கட்டாயம் ஒரு ஊனத்தோடு இருப்பான் என்ற விடயம் இங்கு வந்தபோது தெரியவந்தது. ஈழத்தமிழன் ஏதாவது ஒரு வீரத்தழும்போடு இங்கு நடமாடிக்கொண்டிருக்கிறான். கால் இல்லாமல், கை இல்லாமல், கண் இல்லாமல்- பல்வேறு வகையிலான வீரத் தழும்புகளைத் தாங்கி இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடி கொண்டிருக்கின்ற உங்களை காணுகின்றபோது, வரலாற்றிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்ற உங்களைப் பார்க்கின்றபோது நானும் தமிழன் என்று சொல்லிக் கொள்வதறகு வெட்கப்படுகிறேன்.

இத்தனை மைல்களுக் கப்பால் பிறந்த நான், அத்தனைமைல்களுக்கு இப்பால் பிறந்திருக்கக்கூடாதா? அப்படியொரு வாய்ப்பு கிடைக்காமல் இருக்கின்றேன் என நான் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

நான் பொது வாழ்விற்கு வந்ததே விடுதலைப் புலிகளின் எழுச்சிக்குப் பிறகுதான். ஈழத்தமிழரின் போராட்டத்தின் தாக்கத்தின் விளைவாகத்தான் பொதுவாழ்விற்கு வந்தேன். எங்கெல்லாம் அறப்போர் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் போய் நின்றவன் நான். மாணவர்களுடன் சேர்ந்து கொடிபிடித்தவன். அந்த உணர்ச்சியின் மேலீட்டால் தான் விடுதலைப் புலிகளுக்காக கையெழுத்து வேட்டை செய்தேன்.

குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற வீரர்கள் வரலாற்றை மாணவர்களுக்கு மத்தியிலே விரிவாக்கம் செய்திருக்கிறேன். அன்று- வெலிக்கடைச் சிறையிலே குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றவர்களுக்கு எல்லாம் சிங்கள ஆதரவாளர்கள், சிங்கள பேரினவாத அரசு செய்த அட்டூழியங்களை அன்று தினசரிகளிலே படித்து தவித்துப்போனேன். அப்படிப்பட்ட சூழலில் நாம் வாழ வேண்டும் என்று எண்ணாமல், பின்வாங்கி ஓடுகின்ற கோழைத்தனமில்லாமல், ஈழத் தமிழினத்தவன் எத்தகைய தியாகத்தையும் செய்யத்தயாராக இருக்கிறான் என்பதில் ஈழத்தமிழ் இளைஞர்கள், விடுதலைப் புலிகள் - செய்த அந்தத் தியாகத்தை தமிழக மாணவர் மத்தியிலே மாநாடு நடாத்தி மாணவர்களுக்கு விளக்கியிருக்கின்றேன்.

தமிழ்த் தேசிய உணர்வால், தமிழுணர்வால் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்திருக்கின்றோம். கடந்த இருபது வருடங்களாக, ஈழத்தைத் தொடர்ச்சியாக உந்துசக்தியாக உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஈழம் விடியாதா? ஈழத்து மக்கள் ஒரு விடுதலையைக் காண மாட்டார்களா? ஈழத்து மக்களின் சோகம் கரைபடாதா? அகதிகள் சிந்துகின்ற இரத்தம் நிற்காதா? சக்கரையை உண்பது போல் நச்சுக் குப்பிகளை உண்கின்ற புலிகளின் தியாகத்திற்கு ஒரு எல்லை இருக்காதா? என 20 ஆண்டுகளாக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில் இன்று நடப்பது கனவா? நனவா? என்று தெரியாத நிலையில் ஈழத்து மண்ணிலே நின்று கொண்டு இருக்கிறேன்.

எந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என எண்ணியிருந்தேனோ? எந்த விடுதலைப்புலிகளை பார்க்க வேண்டும் என கருதியிருந்தேனோ? ஏங்கிக் கொண்டிருந்தேனோ? அந்த மண்ணில் நின்று கொண்டு, அந்தப் புலிகளோடு வாழ்ந்து கொண்டு, இன்று உங்கள் மத்தியில் உரையாற்றும்போது நான் நெஞ்சு கனத்து நிற்கிறேன். தமிழகத்து மக்கள் எல்லோரும், தமிழீழ மக்கள் எல்லோரும் தமிழீழம் விடுதலை பெறவேண்டும் என விரும்புகிறார்கள். அதற்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமிழகத்தில் அரசியல் நடத்துகின்றவர்கள், கட்சி நடத்துகின்றவர்கள், பதவிக்கு போட்டி போடுகின்றவர்கள் மத்தியில் அரசியல் ஆதாய அடிப்படையிலேயே காய்கள் நகர்த்தப்படுகின்றன. இன்றைக்கு தமிழ் என்று சொன்னாலோ, தமிழன் என்று சொன்னாலோ கொடும் சிறையே அங்கு கிடைக்கும்.

'பொடா' என்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம். மனித நீதிகளுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம். இன்று தமிழகத்தில்- இனவுணர்வு கொண்டுள்ளவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப் படுகின்றது. தமிழ் என்று சொல்வதற்கோ தமிழீழம் என்று சொல்வதற்கோ, விடுதலைப் புலிகள் என்று சொல்வதற்கோ இன்று தமிழகத்தில் உரிமையில்லை. அந்த உணர்வு உள்ளவர்கள் எல்லாம் அஞ்சி, அடங்கி, ஒடுங்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்தகைய நெருக்கடியில், அத்தகைய பின்ணியில்தான் நாம் இங்கு வந்திருக்கிறோம்.

இங்கு கடந்த இரண்டு தலைமுறையாக ஒரு போரட்டத்தை நடாத்த முடிகின்றது. இதற்கு பின்னணி என்ன? இந்த விடுதலை போராட்டத்தை தலைமை தாங்கிச் செல்கின்ற தலைவர் எத்தனை உறுதி படைத்தவராக இருகின்றார்.

ஒருகால், ஒரேஒருகால் இந்த மண்ணை மிதித்து, கண்ணால் பார்த்து, கண்மூடக்கூடிய நிலை வந்தாலும் கண்மூடவேண்டும் என்ற எதிர்பார்க்கையுடன் இருந்தேன். அந்த வாய்ப்பைக் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கியிருக்கின்றது. ஈழத்து மண்ணெல்லாம் இன்று இரத்தத்தால் சிவந்திருக்கிறது. ஒவ்வொரு தமிழனும் வரலாற்றில் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றான்.மண்ணின் ஒவ்வொரு துகளும், ஒவ்வொரு துளியும் இங்கே எமக்கு பாடம் சொல்லிக் கொண்டு இருக்கின்றன.இது எதனால்?

ஊடகங்கள் எல்லாம் என்ன சொல்லுகின்றன? தமிழகத்து ஊடகவியலாளர் என்ன சொல்கிறார்கள்? - விடுதலைப் புலிகள் வன்முறையாளர்கள், புலிகள வெறித்தனமானவர்கள், விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள், விடுதலைப் புலிகள் அப்பாவிகளை பழிவாங்குகின்றவர்கள். இவர்களது போராட்டத்திற்கும் மக்களுக்கும் ஒரு தொடர்புமில்லை. மக்கள் இவர்களது போராட்டத்தை ஆதரிக்கவுமில்லை. இதுதான் இந்திய ஊடகங்களிலே புலிகளைப் பற்றிக் கூறப்படும் செய்திகள்.

மக்கள் பங்களிப்பு இல்லாமல் இங்கு ஒரு போராட்டம் தொடருமா? இங்கு இணையான அரசு நடந்து கொண்டிருகின்றது. ஒரு அரசை வழி நடத்தக்கூடிய தலைமை இங்கு இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனே காரணம் என்றார்.

## கிபிர்....

பாட்டு நிலையத்துக்கு அறிவித்திருந்தார்.

காலை 9.10 மணியளவில் விமானம் விபத்துக்குள்ளாகி குளியாப்பிட்டியப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. விமானத்தைச் செலுத்திய விமானி விங் கொமாண்டர் அஜித் விஜயசுந்தர பரசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். எனினும் விமானி காயமடைந்ததால் கட்டுப்பெத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## முதற்கட்ட....

கிசனுடன் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க், வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் லீசா, கவுஸ்சிலராகப் பதவி வகிக்கும் ஹான்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்று தொடரவிருக்கும் முக்கிய பேச்சுக்களுக்கான முதற்கட்டச் சந்திப்பாக இது அமைந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசு - புலிகள்....

*கேள்வி:-* விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான கூட்டுச் செயலணிக் குழு தொடர்பான வரைபுகள், தீர்மானங்கள் எல்லாம் எடுக்கப்பட்டாயிற்றா?

*பதில்:-* இவ்விடயம் தொடர்பாக கொழும்பில் பிரதமர் ரணிலுடன் ஆழ்ந்த, விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் அரசியல் ஆலோசகர் மற்றும் பொறுப்பாளர்களுடனும் இவ்விடயம் தொடர்பாக விரிவாகப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளோம்.

*கேள்வி:-* கூட்டுச் செயலணிக் குழு கையாளப்போகும் பிரதான விடயங்கள் எவையாக அமையும்?

*பதில்:-* முக்கியமாக மனிதாபிமான விடயங்களாக அமையும். மனிதாபிமான விடயங்கள் எனும்போது மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்பவற்றுக்கான நிதி சேகரிப்பு பிரதானமாக இடம்பெறும். சர்வதேச ரீதியாக உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றிடம் நிதிதிரட்டுதல் கூட்டுச் செயலணிக் குழுவின் பிரதான முயற்சியாக அமையும்.

பல உதவி வழங்கும் நாடுகள் நிரந்தர சமாதானம் ஏற்படமுன்னர் உதவி வழங்கத் தயக்கம் காட்டுகின்றன. இத்தயக்கம் நீக்கப்படுதல் இன்றியமையாத விடயமாகும். அத்துடன் இச்செயலணிக்குழு மீள்குடியேற்றத்துடன் சம்பந்தப்பட்ட, போக்குவரத்து, சுகாதார வசதிகள், சேவைகள் என்பவற்றையும் கவனிக்கும்.

*கேள்வி:-* அரசாங்கத்திற்கு பாதுகாப்பு அக்கறையுள்ள விடயங்களையும் இக்கூட்டுச் செயலணிக்குழு கையாளுமா?

*பதில்:-* இல்லை, இல்லவேயில்லை.

*கேள்வி:-* அவ்வாறானால் மீள்குடியேற்றம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்களில் கண்ணிவெடியகற்றல் என்பன அரசாங்கத்தின் பாதுகாப்பு அக்கறைகளுடன் சார்ந்த விடயங்கள் இல்லையா?

*பதில்:-* ஆம், அவ்வாறான உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான விடயங்கள் இராணுவ ரீதியான முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வாறான இராணுவ விவகாரங்களை சம்பந்தப்பட்டோருடன் ஆராய்ந்து ஏற்ற தீர்மானங்களை இணக்கமான முறையில் மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தையும் நாங்கள் அனைவரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொள்ள இருக்கிறோம். இராணுவ ரீதியான முக்கியத்துவமுள்ள விடயங்களைக் கையாள அரசாங்கத்தின் சார்பிலும் விடுதலைப் புலிகளின் சார்பிலும் பொருத்தமான பிரதிநிதிகள் அங்கத்துவம் பெறும் மற்றுமொரு தொழிநுட்ப நடவடிக்கைக் குழு அமைக்கப்படும்.

*கேள்வி:-* தற்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் பதவியிலுள்ள அரசாங்கம் பதவி இழக்கும் சூழ்நிலைகள் தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் பற்றிய ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவ்வாறு சில வேளைகளில் நிகழ்ந்தால் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை நீங்கள் எவ்வாறு முன்னெடுத்துச் செல்வீர்கள்?

*பதில்:*சமாதானம் குழம்பக்கூடிய நிலைமை தோன்றும் என்று நான் நினைக்கவில்லை. அரசியல் தலைவர்கள் மட்டத்தில் என்ன பேசப்பட்டாலும் சமாதானம் பாதிக்கப்படப் போவதில்லை. மிக அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு இலங்கை மக்களில் 84 வீதமான மக்கள் பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தின் பக்கம் நிற்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. மக்களின் விருப்படியே எந்த அரசியல் தலைமைகளும் பணியாற்ற விரும்பும் என்பது இயல்பான விடயமே.

*கேள்வி:-* உங்களது இந்த விஜயத்தின்போது பிரதமரைச் சந்தித்துப் பேசியிருக்கிறீர்கள். ஏன் இன்னமும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரைச் சந்திக்கவில்லை?

*பதில்:-* அவரைச் சந்திப்பதற்கான விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

*கேள்வி:-* உங்களது விருப்பத்துக்கு எவ்வாறான பதில் கிடைத்தது?

*பதில்:-* அது எனது நேர அட்டவணையுடன் தொடர்பான சொந்த விடயம்.

இந்நிலையில் எமது செய்தியாளர் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை நோக்கி கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

*கேள்வி:-* இந்த சமாதான முயற்சியில் முதலும் மூலமுமான ஆரம்பிப்பாளராக இருந்தவர் நீங்கள். இவ்வாறான ஒரு சமாதான முயற்சி மூலம் இஸ்ரேல் அரசாங்கத்துக்கும் - பலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதானம் பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை முற்றிலும் தோல்விகரமானதாக மாறியுள்ளதே. இதன் மூலம் நோர்வேயின் சமாதான முயற்சியாளர்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன?

எரிக்சொல்ஹெய்ம்:-

இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினை ஆரம்பம்முதல் மிகமிகச் சிக்கலானதாக அமைந்திருந்தது. புவியியல், அரசியல், இராணுவ ரீதியான பல சிக்கல்கள் அங்கு நிறைந்திருந்தன. ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினை- பலஸ்தீனப் பிரச்சினை அளவுக்கு மோசமான சிக்கல்கள் நிறைந்தது அல்ல. இங்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பூரணமான அர்ப்பணிப்புடன் சமாதானத்தை நோக்கி ஒத்துழைக்கின்றனர். அத்துடன் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் தீவிர அக்கறை கொண்டுள்ளன. ஆகவே இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பது நம்பிக்கையளிககும் விடயமாகவுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.1 | 96.42 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.86 | 149.2 |
| 1யூரோ | 93.8 | 94.14 |
| 1சுவிஸ் பிராங் | 63.19 | 64.14 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 53.5 | 54.00 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.